THE

# GNANAPIRAKASAM.

A MONTHLY JOURNAL DEVOTED TO RELIGION, LITERATURE, SCIENCE &c.

# ஞானப்பிரகாசம்.

யாழ்ப்பாணத்திற் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" திருக்குறள்.

புத்தகம் - க. யாழ்ப்பாணம்:—சாதாரண௵ மார்கழி௴. இலக்கம் - ரு.

## விஷயாநுசிகை.

| | |
|---|---|
| சைவபோதம் | பத்திராதிபர். |
| தொல்காப்பியர் செய்யுளழகு | ,, |
| தமிழ்வசனநடை | ,, |
| வைத்தியவிசாரம் | ,, |
| நல்லைவெண்பா | ,, |
| கும்மைவள்ளல் | ,, |
| திருவூடல் | ,, |
| தலயாத்திரைப்பொதுவிதி | சிவ. இ. மாரிமுத்துஉபாத்தியாயர். |
| கமலாம்பிகைசரித்திரம் | மா. சிவராமலிங்கம்பிள்ளை. |
| புத்தகவரவு | பத்திராதிபர். |
| பத்திரிகைகளின்வரவு | ,, |

*B. M. A. Sanmugaretna Sarma, Editor.*
*P. Manickam Pillai, Proprietor.*

யாழ்ப்பாணம் திருஞானசம்பந்தர் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41

## சேதுபுராண உரை.

அடுத்தமாசம் தொடங்கி, இன்னும் ஒருவராலும் உரையெழுதப்படாத சேதுபுராணத்திற்கு ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களின் மருகரும் மாணக்கருமாகிய வித்துவசிரோமணி ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் கற்பித்தருளியபடியே ஓர் அரிய உரை, தொடர்பாகத் தவறாது இப்பத்திரிகையில் வெளிவரும்.

## சிவஞானசித்தியார் வசனம்.

அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் அருளிய சிவஞானசித்தியார் என்னும் சைவசித்தாந்த ஞானசாஸ்திரம் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் பயன்படும்வண்ணம் வசனரூபமாக அடுத்த மாசம் தொடங்கித் தவறாது இப்பத்திரிகையில் வெளிவரும்

## அரியபிரதிமைப்படம்.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களின் மருகரும் மாணக்கருமாகிய வித்துவசிரோமணி ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் சித்திரப்பிரதிமைப்படம் (*Portrait*) எமது ஞானப்பிரகாச ஆபிசிலும், வண். கிழக்கு நாஷனல் ஸ்ரோர் எஸ். வீ. எஸ். வீராச்சாமிப்பிள்ளையிடத்திலும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். இது ஞானப்பிரகாச பத்திராதிபர் பிரமஸ்ரீ. ஆ. சண்முகரத்தினசர்மா அவர்களது கேள்விப்படி ஸ்ரீமான். எஸ். கே. (லோற்றன்) கனகரெத்தினம் அவர்களால் அமைக்கப்பட்டது.

## பத்திரிகைவேதனம்.

| | ரூ. | |
|---|---|---|
| உள்ளூருக்கு ௵ க-க்கு | உ | 00 |
| இலங்கை இந்தியாவுக்கு ௵ க-க்கு ... ... | உ | உரு |
| பினாங்கு சிங்கப்பூர் ௵ க-க்கு | உ | ௩அ |
| மோரீஸ் நெட்டால் ௵ க-க்கு | ௩ | 00 |
| தனிப்பிரதி ... ... | | உ0 |

☞ கையொப்பநேயர்கள் பத்திரிகைவேதனத்தை முற்பணமாக அனுப்பி உதவிசெய்யும்படி வேண்டுகின்றோம்.

## விளம்பரவேதனம்.

| | ரூ. | ச. |
|---|---|---|
| வரி க-க்கு ... ... | | அ |
| கால்பத்திக்கு ... | க | 00 |
| அரைப்பத்திக்கு ... | உ | 00 |
| ஒருபத்திக்கு ... ... | ௩ | ரு0 |
| ஒருபக்கத்துக்கு ... | ௬ | 00 |

பொ. மாணிக்கம்பிள்ளை

ஞானப்பிரகாசஆபீஸ்
வண்ணார்பண்ணைப்போஸ்டு
யாழ்ப்பாணம்

# ஞானப்பிரகாசம்.

மாதம் ஒருமுறை பிரசுரமாகும்.

புத்தகம் - க. யாழ்ப்பாணம்:—சாதாரண௵ மார்கழி௴. இலக்கம் - ரு.

உ

கணபதிதுணை.

மந்திரநான்மறையாகிவானவர்
சிந்தையுணின்றவர்தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே.

## தமிழ்த்தெய்வவணக்கம்.

மறைமுதற் கிளந்த வாயான்
மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி
யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை
யனைத்தும்வென் றாரி யத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை
யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

## ஞானப்பிரகாசம்

### சைவபோதம்.

(சஉ-ம் பக்கத்தொடர்ச்சி.)

இதுநிற்க, சித்தாந்தசைவநூல்கள் எடுத்துக் கூறும் பொருள், சிவதருமம் சிவஞானம் என இருவகையின தாகும். அவற்றுள், சிவதருமம் பொதுவுஞ் சிறப்பும் என வேறிருவகைப்படும். பொதுச் சிவதருமமாவது சிவதீக்கை எனப்படும்அங்கமானது இன்றி அவ்வாறு செய்வதாகும். சிறப்புச் சிவதருமமாவது சிவதீக்கை என்னும் அங்கசகிதமாய் அவ்வாறு செய்வது. இவ்விரண்டும் பத்திகாரணமாக மெய்மைபெறச் செய்துவருவதும் புகழ்முதலியவாக உலகிற்றோன்றும் பயனை நோக்கிச் செய்துவருவதும் என வெவ்வேறு இருவகைப்படும்.

இவற்றுள் திருக்கோயில் அலகிடல் மெழுகல் முதலியன சரியையிற் சரியை. ஐயைந்து மூர்த்திகள் விநாயகக்கடவுள் முதலிய ஆவரணமூர்த்திகளில் ஒருமூர்த்தியைப் பூசித்தல் சரியையிற் கிரியை. இருதயகமலத்தில்உருத்திரமூர்த்தியைத் தியானஞ்செய்தல் சரியையில் யோகம். அவ்வாறு செய்துவரும் தியானபாவனையின் உறைப்பினால் தோன்றுநிற்கும்ஓர் அநுபவ உணர்வின் நிகழ்ச்சியே சரியையின் ஞானம். சிவபூசைக்கு வேண்டப்படும் உபகரணங்கள் எல்லாஞ் செய்து கோடல் கிரியையிற் சரியை. சைவாகமத்தில் விதித்தவாறே ஐவகைப்படும் சுத்திமுன்னாகச் சிவலிங்க வடிவிலே செய்யும் பூசனை கிரியையிற் கிரியை. அகத்தே பூசை ஓமம் தியானம் மூன்றற்கும் மூவிடம் வகுத்துக்கொண்டு செய்யப்படும் அந்தரியாகம் கிரியையில் யோகம்.

அவ்வநந்தரியாக உறைப்பின்கண் தோன்றும் ஓரநுபவ உணர்வின் நிகழ்ச்சியே கிரியையில் ஞானம். இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமம் என்னும் நான்கும் யோகத்திற் சரியை. பிரத்தியாகாரமும் தாரணையும் யோகத்திற் கிரியை. தியானம் யோகத்தின் யோகம். சமாதி யோகத்தின் ஞானம். இந்தயோகம் சகள நிட்களங்களைப் பற்றி நின்றுசெய்யும் சாலம்ப யோகமும், நிட்களத்தைப் பற்றிநின்றுசெய்யும் நிராலம்ப யோகமும் என்று இருவகைப்படும். இனி, கேட்டல் ஞானத்திற் சரியை. சிந்தித்தல் ஞானத்திற் கிரியை. தெளிதல் ஞானத்தில் யோகம். நிட்டைகூடுதல் ஞானத்தில் ஞானம். என்றுணர்க.

இனிப் புகழ்முதலிய உலகப்பயனை நோக்கிச் செய்யும் உபாயச் சரியையிற் சரியை முதல், உபாய ஞானத்தின் ஞானம் ஈறுயுள்ள பதினாறு வகையினின்றும் பலவேறு வகைப்பட விரியும் சிவபுண்ணியங்களுக்கெல்லாம்பயன், அவ்வவற்றிற்கேற்பக் காலாக்கினி உருத்திரர்முதல் சீகண்ட உருத்திரர் புவனத்தின் கீழுள்ளஉருத்திரர் ஈறான அவ்வவ்புவனபதிகள் உலகத்தில் சாலோகம் முதலியவற்றைப் பெறுதலாம்.

பத்திகாரணமாகச் செய்யப்படும் உண்மைச் சரியையிற் சரியைமுதல் உண்மை யோகத்தின் ஞானமீறாகிய பன்னிருவகையினின்றும் பலவேறுவகைப்பட்டு விரியுஞ் சிவபுண்ணியங்களுக்கெல்லாம்பயன், அவ்வவற்றிற்கேற்பச் சீகண்டபுவனமுதல் சுத்தவித்தைக்குக் கீழுள்ள அவ்வப்புவனபதிகளுடைய சிவலோகத்துச் சாலோகம்முதலிய அபரமுத்திகளைப் பெறுதலாம்.

உண்மை ஞானத்திற் சரியைமுதலிய மூவகையினின்றும் பலவேறுவகைப்படும் சிவபுண்ணியங்களுக் கெல்லாம் பயன், அவ்வவற்றிற்கேற்பச் சுத்தவித்தைமுதலிய அதிகாரதத்துவ போகதத்துவங்களில் வைகும் மந்திரர் மந்திரமகேசர் முதலியோர் புவனத்துச் சாலோகமுதலிய அபரமுத்தியைப் பெறுதலாம். இனிப்பலவேறுவகைப்பட விரியும் ஞானத்தின் ஞானங்களுள் முடிவாகிய ஞானத்திற்குப் பரமுத்தியே பயனென உணர்ந்துகொள்க.

# தொல்லாசிரியர் செய்யுளழகு.

(௬௨-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஓவியத்தொழிலிற் கைவந்தானொருவன் பணிநுட்பம் தோன்ற எழுதிக்காட்டும் படம் கட்புலனொன்றற்கே தோன்றும் இயல்பினது. நல்லிசைப்புலமை வாய்ந்த கவிஞன் செய்துகாட்டும் செய்யுள்கள் கண்முதலாயுள்ள பொறிகடோறும் நின்று உள்ளத்திலே சென்று தோன்றாநிற்கும் பெருவியப்பு வாய்ந்துள்ளது. ஓவியத்தொழிலினன் எழுதப்படும் பொருளை உள்ளத்தமைத்து அளந்து பின் அதனைத் திறம்பட எழுதல் முறைமையாகும். நல்லிசைப்புலவன் செய்தியும் அவ்வாறேயாமென்றுணர்க.

படம் எழுதுவோன் புலன் அறிவைப்பற்றி நிற்பன். புலவனோ மன அறிவைப்பற்றி நிற்பவன். புலனறிவோ தூலப்பொருள்களை விரித்தறியும் இயல்பினது. மனவறிவோ அப்புலனறிவின் சாரமாய்நின்று சூக்குமப் பொருள்களை ஓரிமைப்போதிற் பகுத்தறியும் இயல்பினது. மனோபாவத்தின் வசம்பிலாற்றல் சொல்லத்தகும் தரத்ததன்று. ஓரணுவை மலைபோலாக்கும். ஆக்கப்பட்ட அம்மலையினை ஓரணுவினுங் குறுகச்செய்யும். நல்லிசைப் புலவனாகிய மந்திரவிஞ்ஞையாளன் தனது நுண்ணறிவெனப்படும் மாத்திரைக்கோலினால் மனோபாவத்தினைத் தீண்டும் மாத்திரையானே அது துணுக்கென எழுந்துநின்று அவன்வேண்டியவண்ணம் சுழன்று நின்றாடாநிற்கும். கலையின்பகுதிகள் அளவிறந்தன. விஷயங்களைப் பிரத்தியக்ஷமாகக் காட்டும்செய்தி கட்புலனுக்குப்பெருங்களிப்பினைச் செய்யும். முறைப்படி எழுதப்பட்ட சித்திரங்கொண்டு அவ்வப்பொருள்களினியல்புகளை நன்கு கண்டும் அனுமானித்துமறியலாம். அதுபோலச் சான்றோர் அருளிய கவிகளிலும் பொருள்களின் இயற்கையழகும் அவற்றினியல்புகளும் புலப்படக்காட்டும் அவர் மனோபாவவன்மையை தெய்வீகமாண்

பென்று கூறுதலே அமைவுடைத்தாம். உதாரண முகத்தாற் சிலகாட்டப்படும்.

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்புகை கமழத்
தான் துழந்து அட்டதீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.

என்பது குறுந்தொகை. இது தன்புதல்வி நாயகன் மனையில் இல்லறம் நிகழ்த்துமியல்பு கண்டறிதல் காரணமாகச் சென்றிருந்த செவிலித்தாய் அவ்விருவரும் இன்றியமையாப் பெருங்காதற் பிணிப்புண்டு நெஞ்சொன்றாகி ஓர்வழிப்பட்டு நிற்கும் செய்திகண்டு தன்னுட்பேருவகைபூப்ப அவள் கூறியகூற்றாகச் செய்யப்பட்டது இச்செய்யுள் என்றுணர்க. இதன் பொழிப்பு, தன்பெறற்கரும் புதல்வி, வற்றக்காச்சி இறுகிய தயிரினைப் பிசைந்த காந்தள் மலரினைநிகர்த்த சிவந்த மெல்லிய விரல்களாற், மருங்கிற்சூழ அணிந்திருந்த பூந்துகிலானது நாயகற்கு அட்டிற்றொழில் செய்யும் விரைவினால் ஒருபாற்சரிந்து வீழுதலும் அதனைக்கழுவாது உடுத்துக்கொண்டு குவளைமலர்போன்ற மை தீட்டிய தன் கண்களிலே, தாளிதஞ்செய்யுங்கால் நெய்யுடன் விராவி எழும் நறிய புகையினாவி எழுந்து சூழ்ந்து கொள்ள அதனையுமொருபொருட்படுத்தலின்றித் தான் துடுப்பினால் துழாவி அட்ட இனிய புளிப்பாகினைத் தன் நாயகன் மிகவும் இன்சுவையுடையதென்று பாராட்டி உண்ணுதலைநோக்கி, அவள் முகமானது நுட்பமாய் மகிழ்வுடைத்தாயிற்று என்பதாம்.

இச்செய்யுளை விரையாதேகி நோக்குங்கால், அதன் அழகும் மனோபாவத்தின் இயல்பும் நன்கு புலப்படுகின்றது. சொற்களின் நிலையும் ஒன்றாயினும் பொருள்குறித்தலின்றி வேண்டாகூறல் ஆகாது முன்பின்னின்றபொருட் டொடர்புநோக்கிப் பதங்கள் அமைந்துநிற்கும் அவற்றினியைபும், அவ்வியைபிற்றோன்றும் சந்த இன்பமும் வடமொழி விரவலின்றி நடக்கும் செந்தமிழ்வழக்கும், நீர்மடையிலே தெளிநீர் ஓடுமாறு போன்று தண்ணென்று செல்லும் அதன் ஒழுக்கும் அணி இலக்கணங்கள் தோன்றவைத்தமாண்பும், ஆன்றபொருள்தரும் அமைவும் அறிவினைவிரித்துச் செல்லும் தன்மையும், அதன்பாற்றோன்றும் தெளிவும் உய்த்துணர்வுகொண்டு நோக்குவோர்க்கே புலனாகும்.

இன்னும் தலைவனும் தலைவியும் இருந்து இல்லறநிகழ்த்தும் ஒழுக்கம் முல்லையெனப்படும். ஆதலின் அந்நிலத்திற்கேற்ப, "முளிதயிர்பிசைந்த" என்றார். தன் நாயகன்பாற் கொண்டுள்ள காதல் மிகுதியினாலும், மற்றையோரடுவாராயின் சுவைமுதலியன எவ்வாறாமோ என்றெழுந்த ஐயுறவுதோன்றிநின்று மலைதலாலும், தானே தனது சிவந்த மெல்லிய விரல்களினால் தயிரினைப்பிசைதலும், காலந்நீடிப்பின் நாயகன் பசிநோயால் வருந்துவனே என எண்ணி மிக்கவிரைவினோடும் சாலையிலே பாகஞ்செய்தலும், அப்பொழுது இடையிற்கட்டியிருந்த பெறற்கரும் ஆடையானது நெகிழ்ந்து வீழவும் தயிர்பிசைந்தகையினை நீராற்கழுவி உடுப்பின் கழியும் காலநீட்டிப்பினைக் கருதிக் கழுவாதே உடுத்துப் பிசைந்து திருத்திய புளிம்பாகினைத் தாளிதஞ்செய்யும்பொழுது மேலெழும் நறிய புகை குவளைமலர்போன்ற கண்ணிலே நுழைந்து மூடி வருத்தவும், அப்புறம் தன்முகத்தைத் திருப்பின் பாகபக்குவம் கெடுமென்று சிந்தித்துத் திரும்பாது அதனைப் பக்குவம்நோக்கித் துழாவிநிற்கும் அருமையும் இவ்வாறு பல்லாற்றானும் தனக்குவந்துற்றவருத்தங்களை நோக்காது நாயகன்பாற்கொண்டகாதலும் இன்சுவையும் கனிந்தொழுகப் பாகஞ்செய்து படைத்த அப்புளிம்பாகினை, நாயகன் மகிழ்ந்துண்ணல்கண்டு தன் மகிழ்ச்சி வெளிப்படின் அதுவும் இழுக்காய்முடிதலின் அதனைப்புலப்படுத்தலின்றி அவள் முகமலர்ந்து காட்டுதலும் பிறவும் சிலசொற்களால் பல்வகைப்பொருள் மிக விளங்கச் செய்யுள் செய்த ஆசிரியரின் நுண்ணறிவு எத்துணைத்து என்று இக்காலத்தாரால் எண்ணவும் படுமோ எங்க.

இன்னும் புதுமணஞ் செய்துகொண்டு நாயகன் மனைபுகுந்து அவனைச் சுற்றத்தாருடன் கூடுறாவண்ணம் பல்வகைப்படும் தந்திரோபாயங்களாற் பிரிவுறச்செய்து பாகசாலாதிகாரம் தனக்கே ஆக்கி நாயகனாற் கொடுக்கப்படும் தண்டுலாதிகளை வேண்டிய அளவின் மிதப்பக் கூறி வாங்கிப் பின் வாங்கியவாறே அவைகளை அழித்தலின்றி அளவிற் சுருக்கிச் சிறிது சிறிதாகத் தேனீபோல ஈட்டி ஒரிடத்தே வைத்து, காலம்வாய்ப்பத் தந்தை தாயர் அயலார் என்றின்னோர் வஞ்சகவழியால் செய்துதரும் பேருதவிகொண்டு அப்பொருள்களை விற்றுப் பிறரறியாவண்ணம் இந்நெறியாற் பொருள்தேடிப் பெருந்தொகை கூட்டும் இத்தீச்செயலிலே அயர்விலராய் ஒழுகலாலே, நாயகன் உண்ணினும் உண்ணாதொழியினும் சுவை முதலியன குன்றினும் பொருளாசை படர்ந்து மூடிய தம்மனதிலே எவ்வகைப் புடைபெயர்ச்சியும் அன்பும் இரக்கமும் இன்றித் தம்கருமமே கண்ணாயிருந்து நாடோறும் தாம் பயின்றுவரும் தனிப்பொருளீட்டலாகிய இவ்விழிதொ

ழிலால். காதலன்பாற் கொண்ட மெய்யன்பும் கற்புநிலையும் பயப்பயத் தேய்ந்துபோக நாயகன் உணவு அருந்தும் காலம் நோக்கி வன்மொழிகொண்டு இன்மையேகூறிக் கொடுஞ்சொற்களால் இடித்துரைத்துப் பலவாற்றானும் வருந்தச்செய்து, நாயகன் கவிழ்ந்தமுகம் நிமிர நோக்குங்கால் ஒருபாற் சுழித்து நீட்டி இவ்வக நிகழ்ச்சிகள் ஒன்றும் வெளியே புலப்படாவண்ணம் மறைத்துப் பொய்ம்மைபெறநடித்து இக்கால மகளிர்களுட் பெரும்பாலார் முகங்கள் போல வேற்றொரு புது மகிழ்ச்சிகாட்டி மயக்கிய தன்று அவள்முகம் என்பார். "நுண்ணிதின்மகிழ்ந்தன்று" என விதந்தார்.

வரும்.

# தமிழ்வசனநடை.

(௬௫-ம் பக்கத்தொடர்ச்சி.)

தமிழ்மொழியிலே நெடுங்கணக்கிலே காணப்படும் எழுத்துக்கள் ஒலிபேதங்களை எல்லாம் குறியீடுசெய்வதற்குக் குறைவுடையனவாகின்றன. ஆதலின் தமிழ் நெடுங்கணக்கிலே எழுத்துக்கள் சிலவற்றை இன்னும் சேர்க்கவேண்டும் என்றார் ஆங்கிலேயபாஷாவிற்பன்னராகிய பண்டிதர் ஒருவர். காலங்களுக்கேற்பப் பாஷையைத் திருத்த வேண்டுமென்பதும் அவர் கருத்து. குறைவுடைமை நோக்கிக் காலங்கடோறும் திருத்தமுறும் ஏனைப்பாஷைகள் போல இதனையும் அப்பண்டிதர் எண்ணினார்கள். இதனிடத்துள்ளனவாக அவர் காட்டும் குறைவுடைமைகள் சிறிதும் பொருத்தமுடையனவுமல்ல. வடமொழியின்கண்ணுள்ள ஒலியின்பேதங்களைத் தமிழிற்காட்டப்புகின் எழுத்துக்கள் காணப்படுகின்றில என்றார். அதன்பொருட்டே "வடமொழியாக்கம்" விதிக்கப்பட்டுள்ளது. அதனினும் திருப்திபிறவாது தம்மனம்போனவாறு இலக்கணவிதிகளை முறைபிறழச் செய்யும் விதிகளை எழுதிவிடுத்தல் முறைமையன்று.

"எப்பொருளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதன் மரபே."

என எழுந்த ஆசிரியர் ஆணைவழிநிற்றலே நம்மனோர் கடன்முறை என்றுணர்க. எப்பொருட்கும் இறைவராகிய சிவபெருமானால் அருளிச்செய்யப்பட்டு அவரனுக்கிரகங்கொண்டு முக்கால அறிவினோடு பாசத்தடையுமற்ற சீவன்முத்தர்களான அகத்தியர் தொல்காப்பியர் முதலிய முனீந்திரர்களால் இலக்கணஞ்செய்யப்பட்டுப் பின் பல்லாயிர கோடி நூன்மாலைகள் அளவிறந்த கவிஞர்களாற் புனையப்பட்டுள்ள நமது தமிழ்ப்பாஷையானது இக்காலத்தொருவரால் திருத்தமுறும் பெற்றி வாய்ந்துளதாமே. தலைச்சங்கத்தும் இடைச்சங்கத்தும் கடைச்சங்கத்தும் வீற்றிருந்து தமிழாராய்ந்தருளிய பெருமக்களால் விடப்பட்ட பிழைகள் அன்றோ இப்பொழுது திருத்தமுறும் தகைமையுடையவாயின. "தமிழ் பழையபாஷை அதிலில்லாதது ஒன்றுமில்லை" என்று சொல்வதுமுண்டு "அது குருட்டு நம்பிக்கை" என்றுமப்பண்டிதர் சொல்வாருமாயினர். தமிழ்ப்பாஷையிலே பேசுவது பெருமைக்குறைவு என்றும் தமிழ்க்கல்விப் பயிற்சி அவமானத்தைத்தருமென்றும் எண்ணுமொருசாராருமுளர் என்றால் பண்டிதரவர்கள் குற்றமுடையவர்களுமல்லர். ஆங்கிலேயபாஷையைக் கற்றபின் நமது தமிழ்ப்பாஷையை அவமதித்து விட்டொழியு மவ்வளவில் நிற்பவர் உத்தமோத்தமர்கள். அதன்மேலும் தமிழ்ப்பாஷையைக் கற்றலின்றி, அதனிடத்தே சில குறைபாடுகள் உளவென்றும் அவைகள் திருத்தப்படும் தகுதியுடையன என்றும்கூறி. பிறபாஷைச் சொற்களை நம்தமிழ்மொழியினுள்ளே கொண்டுவந்து சேர்க்கவெண்ணும் புலவர்களைக்குறித்து யாதுசொல்லலாகும்.

இந்தியாவிலே பேசப்படும் தமிழ்ப்பாஷையினுள்ளே பிறபாஷைச் சொற்கள் அளவிறந்தன வந்து கலப்புற்றன. அவைகளுள் ஆங்கிலேயபாஷாபதங்களே மிகப்பலவாம். ஆங்கிலேயபாஷை தமிழிலே எழுதிவாசிக்கப் படுகின்றது எனினும் இழுக்குறாது. ஆதலாற் பிறபாஷைச் சொற்கள் விரவலின்றி எழுதுதலே நமது தமிழ்ப்பாஷைக்குப் பேரழகு தருவதாகும்.

எங்களூரிலே பெரும்பாலும் வழங்கும் ஆங்கிலேய பதங்களாவன றோட்டு ஆபிசு லாம்பு பெட்டிசம் திறான்சிலாத்துச் செய்தல் றிஜிஸ்டர் செய்தல் என்றற் றொடக்கத்தன அளவில்லன என்க. வெந்தீசு அலவாங்கு மேசை முதலியன போர்த்துக்கீசுச் சொற்கள். ஜவாப் அர்சா உறுமால் றொட்டி முதலியன இந்துஸ்தானிச்சொற்கள். எக்கச்சக்கம்முதலியன தெலுங்குச்சொற்கள். மையம், மௌத்து என்பன மகம்மதியர் வழக்கிற் காணப்படுவன. சிங்களச்சொற்களும் வழக்கிலே வந்து கலப்புறத்தொடங்குகின்றன. ஆதலினால் இவ்வாறு பிறபாஷைச் சொற்கள் வந்து விரவா வண்ணம் காத்து இவைகளை ஒழித்தல் வே

இது தொல்லாசிரியர்களாகிய முனிவரர்கள் இட்ட ஆணைநெறி என்று முணர்க.

முற்காலத்திருந்த புலவர்கள் அருளிய தொல்காப்பியம் கலித்தொகை சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய பழைய காப்பியங்களிலும் இளம்பூரணர் சேனாவரையர் நச்சினார்க்கினியர் பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்கள் இயற்றிய உரைநடைகளிலும் வடசொற்களைத்தானும் காண்பதரிது. பழைய நூலுரைகளிற் பயிற்சியின்றிச் சொற்பஞ்சமுறுவார்க்கே பிறபாஷைச் சொற்கள் வேண்டப்படுவனவாயின.

வரும்.

---

# வைத்தியவிசாரம்.

## வைசூரி.

சுரத்துடன் ஆரம்பமாகிச் சிலதினங்கள் கழிந்தவுடன் தோலிலே பருக்கள் கொப்புளங்கள் தோன்றுவதும். பெரும்பாலும் ஒரேமுறை மாத்திரம் வருவதும் ஆகியநோய்கள் பலவுள. அவைகளுள் வைசூரி, கோவைசூரி, கொப்புளிப்பான், சின்னமுத்து முதலியவைகளும் அவ்வினத்தனவாய் ஓரிடத்திருந்து மற்றோரிடத்திற்குப் பரவும் இயல்பினையுடையன.

## வைசூரி

இது கொடிய சுரத்தோடு ஆரம்பித்துப் பருக்கள் தோன்றி நீர்கொண்டு பின் சீழ்கட்டி, மிகுதியும் எட்டுத்தினங்களுள் மடியத் தொடங்கும் ஓர் கொடிய நோய். ஐதுவைசூரி, செறிவைசூரி, போலிவைசூரி என இது மூவகைப்படும். பருவில்லாத வைசூரியும் உண்டு என்று பிரான்கு என்னும் வைத்தியர் கூறுகின்றார்.

## ஐதுவைசூரி.

ஆதியில் தாங்குதற்காற்றாதகொடுங் குளிரும் ஆயாசமும் தலைபிடியும் இடுப்பிலே நோவும் உண்டாம். அதன்பின் முதுகிலே பலவீனமும், நாவிலே வெண்ணிறம் பொருந்திய ஓர்வகைஆடையும், ஓங்காளமும், வாந்தியும், மேல்வயிற்றில் புண்பாடும், கன்னங்களிற் சிறிது வீக்கமும், சிலரிடத்தே ஓர்வித மூடத்தன்மையும் காணப்படும் குழந்தைகளுக்காயின் சிலகாலத்தில் காக்கைவலி (*Epilepsy*) உண்டாதலும் வழக்கம்.

இக்குணங்களுக்குப் பின்தான் தாபிதம் எழும்பும். நாடி நிறைவுடன் நெருக்கமாகித் துடித்து நடக்கும். தேகம் வறட்சியுற்றுச் சூடுகொள்ளும். மலசல இயக்கங்கள் குறைவுபடும். சோம்பலின் முதிர்ச்சியினால் புரண்டு புரண்டு படுத்தலும் உடன் எழுதலும் ஆகிய ஒருவகைக் குணம் கொள்ளும். சிலர்க்குப் புலம்பலும் உண்டாகும். இக்குணங்கள் எல்லாம் வேர்வைகண்டு பருக்கள் தோன்றும் வரையுந்தான் நிலைபெற்றிருக்கும். பருக்கள் தோன்றவே சுரம் தணிந்துவிடும்.

குளிர்தொடங்கி இரண்டுநாள்வரையில் அல்லது சிலர்க்கு இதற்குமுன்னும் வேறுசிலருக்கு நான்கு நாள்வரையிலும் கடுகளவினவாகி மேலெழுந்து மிருந்த வயிரித்த பருக்கள் முகத்திலும் நெற்றியிலும் தோன்றும்.

மூன்றாம் நாலாம் நாட்களிலே முகத்திலே முன் தோன்றாத எஞ்சிய பாகங்களிலும் கழுத்து தோள் புயம் கை கால் இவைகளிலும் பருக்கள் நிரையே தோன்றி முடிவில் தேகம் முழுதும் பரவி எங்கும் காணப்படும்.

ஐந்தாம் நாளிலே ஒவ்வொரு பருவின் நுனியிலும் நிறமற்ற நீரையும் நடுவிலே குழியையும் சிவந்த விளிம்பு அல்லது ஓரத்தையுமுடைய நுண்மையாகிய நீர்ப்பருக்கள் தோன்றும். இத்துடன் சுரமானது அதிவிரைவிலே தணிந்து போகும்.

ஆறாம் நாள் வரையிலே தொண்டையில் வீக்கம் காணும். மென்றுவிழுங்குவது மிகவும் கஷ்டமுடையதாகும். குரல் கம்மும். தடிப்புற்ற உமிழ்நீர் பெருகத்தொடங்கும். தாபிதமும் பருவும். வாய் தொண்டை இவற்றின் உள்ளுறைச் சவ்விலும் தோன்றிய காரணத்தினாற்றான் இக்குணங்கள் காணப்படும் என்றுணர்க.

உள்ளுறைக் சவ்விலே பருக்கள் சிறுத்துத் திரண்டு புள்ளிகளாகத் தோன்றும். அதன்பின் கண் இமையிலும் முன்றோலிலும் பிறவிவாயின் அருகிலும் இவ்வித பருக்கள் உண்டாகும் என்றறிக.

எட்டாம்நாள்வரையிலே பருக்களின்நடுவிலிருக்கும் குழிகள் மறைந்து பருவைச் சூழ்ந்திருந்த செந்நிறம் முன்னையினும் எங்கும் நன்றாகப் பரந்து சீழ் கொள்ளும். அதன்பின் நோயாளியின் முகத்திலே வீக்கம் காணும். கண்கள்திறக்கக்கூடாத அவ்வளவாக இமைகளிலேவீக்கம் உண்டாம். வாயிலும் முகத்திலும் தொண்டையிலும் பருக்கள் நிரம்பத் தோன்றும்.

எட்டாம் அல்லது ஒன்பதாம் நாள் வரையில் பருக்கள் ஆகப்பருத்து அவைகளின்நடுவிலே ஓர் கரிய மறுத் தோன்றும். பருவைச் சூழ்ந்திருந்த சிவப்புக் குறைந்து முகத்திலிருந்த வீக்கம் மாறி விடும். அதன்பின் கைகால்களிலே வீக்கம் ஆரம்பிக்கும்.

அதன்பின் பருக்கள் தகர்ந்து சீழ்பொசியத் தொடங்கும். இவ்வாறுசீழானது வடியப் பின் காய்ந்து அசறுகள் ஆகிச் சிலகாலத்தின்பின் சொரியத்தொடங்கும் தொடங்கவே கீழே இருக்கும் தோல் சில கிழமைகள் வரைக்கும் கருநிறங் கொண்டிருக்கும் பின் கை கால்களிலிருந்த வீக்கம் தணியும். தணிதலும் பதினேழாம்நாள் அளவிலே நோயாளிக்குச் சிறிது சுகந்தோன்றும். நோய் கொரேமாயிருந்ததாயில் முகத்திலும் மற்றைய இடங்களிலும் தழும்புகள் நிலைபெற்றிருக்கும்.

பருக்கள் தோன்றிச் சீழ்பிடிக்கும் கால்ம் வரையும் அது பழுக்குங்காலம் எனப்படும்.

இக்காலத்திலே பருக்களின் தொகைகளுக்குத் தக்கதாகப் பெரும்பாலும் எட்டாம் நாள் வரையில் இரண்டாம் காய்ச்சல் தோன்றும்.

இக்காய்ச்சல் ஆரம்பிக்கும் பொழுது நோயாளிக்கு அதிகம் தேகத்தில் அசதிமுதலிய குணங்கள் உண்டாகும். நித்திரை இல்லாது போய்விடும். நாடிமிகவிரைவுடன் நெருங்கித் துடிப்புற்று நடக்கும். நாவிலே வறட்சி தோன்றி மஞ்சள் நிறம் காணப்படும். சலம் குறைவுபடும். அதன்நிறம் சிவக்கும். பெரும்பாலும் இரவிலே புலம்பல் உண்டாம். மல இயக்கம் கட்டுப்படும். சிலருக்கு இக்குணங்களால் சகித்தற்கரிய பெருந்துன்பமுண்டாம்.

வரும்.

யாழ்ப்பாணம் இருபாலை

வித்துவசிரோமணி

சேனாதிராயமுதலியாரவர்கள் இயற்றிய

# நல்லைவெண்பா.

(௫0-ம் பக்கத்தொடர்ச்சி.)

தேங்குயிலா ணண்ணிச் சிறுமியர்மா லைக்குயிலாற்
பூங்குயில்க ளேங்கும் பொழினல்லை—யோங்கும்
பரங்கிரியார் நள்ளாரிற் பாரு தருளும்
பரங்கிரியார் நள்ளார் பதி.

தேன் குயில் - இனிய வார்த்தை. நண்ணி - அருகேவந்து. மாலைக் குயில் - பூமாலையணிந்த மேகம்போன்ற கூந்தல். குயின் குயில் எனவும் வழங்கும். குயின் - மேகம். ஏங்கல் - கூவுதல். மனமேங்குதல். கார் காலம் குயில்களுக்கு வெறுப்பைத்தரும் பருவம் ஆதலாற் கூந்தலை முகிலென்று நினைந்து குயில்கள் ஏங்கின என்க. இன்ப துன்ப மிரண்டனையு முறையே முன்னும் பின்னும் தரும்இயல்பினவாகிய குயில்கள் இரண்டும் அச்சிறுமியர்பா லுள்ளன என்பதாம். முதலிலே இன்பஞ்செய்து பின் அதனினும் பெருந் துன்புறுத்தும் பண்பினதாகும் பெண்டன்மை என அவரியல்பு விளக்கியவாறு. ஓங்கு உம்பர் அங்கு நள்ளாரில் இரியார் பாருது - உயர்ந்த தேவர்கள் அங்கே பகைவராலே இரியாராய்க் கெடாது. திருப்பரங்கிரி - திருப்படைவீடாறனு ளொன்று. நள் ஆர் - விருப்பம் ஆர்ந்த. நள் - முதனிலைத் தொழிற்பெயர். முதலடியிற் குயில் இரண்டும் ஆகுபெயர்கள். (உ௩)

மொய்ம்மணிமேன் மாளிகையின் மின்னார் முகமதியை
மெய்யிற் சகோரம் விழைநல்லை—துய்ய

திருவே ரகம்பதியான் சீரடியார் தம்மைக்
கருவே ரகம்பதியான் கால்.

மணி - இரத்தினங்கள் அழுத்திய மேன்மாளிகை என்க. மெய்யில் - முக மெனக் கருதாது மதியெனவே கருதி. சகோரம் - நிலாமுகிப்புள். திருவேரகம் - திருப்படைவீடாறனு ளொன்று. கரு வேர்அகம் பதியான் - கருவினது வேரிடத்தே பதியச் செய்யாதவர் என்றது இனிமேற் படையாதவர் என்பதாம். கால் - இடம். (௨௪)

சுவாசகமுந் நாலோர் சுருதியிசை தேர்ந்து
சுவாசகமுஞ் சொல்லுசீர் நல்லூர்—தவாத
பரதத்து வத்தன் பரையாள் குடையாம்
பரதத்து வத்தன் பதி.

சுவாசகம் - கிளி. நாலோர் - அந்தணர். சு - நல்ல. வாசகம் - வார்த்தை. தவாத - கெடாத. பர தத்துவத்து - மேலாகிய தத்துவ ஞானத்தையுடைய. அன்பர் - மெய்யடியார்கள். குடை ஆம் பரதத்து அத்தன் - குடையாகிய கூத்தினை உடைய பிதா. அது செவ்வேள் அவுணர்கள் விடுத்த படைக்கலங்களை எல்லாம் போரிற்காற்றாதுபோகட, அவர் வருத்தமுற்றாராக, அவ்வளவிலே மாயைகளைத் தொலைத்தல் காரணமாகவும், பெருமானார் தங்குடையை முன்னே சாய்த்து அதுவே ஒருமுக எழினியாக நின்றாடியருளியதாம். அது நான்கங்கமுடைத்து என்னை? "அறுமுகத்தோனாடல்குடைமற்றதற்குப்பெறுமுறுப்புநான்காமெனல்" என்றாராகலின். (௨௫)

தேக்கும் புலவருடன் சிரகத்தார் மார்பினருந்
தூக்கின் பொருள்பகருந் தூநல்லை—காக்குமவன்
கந்தப் பொகுட்டான் கரியவனுங் கைதொழுசீர்க்
கந்தப் பொகுட்டான் களம்.

புலவர் தூக்கின் பொருள் பகரும் - அறிஞர்கள் செய்யுளின்பொருளினைக் கூறுகின்ற எனப் புலவர்க் கியையக்கொள்க. சிரகத்தார் மார்பினர் தூக்கின் பொருள் பகரும் - வணிகர் நிறை கோலினாலே பொருள்களை விற்கும் என வணிகருக் கியையக்கொள்க. காக்குமவன் - விட்டுணு. கந்தம் - நறிய. பொகுட்டான் - தாமரைப் பொகுட்டில் வசிக்கும் பிரமா. கரியவன் - இந்திரன். கந்தப் பொகுட்டான் - கந்தவெற்பினை உடையவர். (௨௬)

வேதவொலி வேள்வியொலி மிக்க விழாவொலியா
லோதவொலி நாணு முயர்நல்லை—காதரவின்
மாற்கிழவ னாகி வரைக்குறவர் முன்வள்ளி
பாற்கிழவ னானான் பதி.

ஓதம் - கடல். காதரவு - அச்சம். மால் - மயக்கம். கிழவன் - முதியோன். வள்ளிபால் - வள்ளிநாயகியாரிடத்து. கிழவன் - நாயகன். (௨௭)

அத்திபல வாலரசு நாக மிசையுறலா
லித்தாணி போலு மெழினல்லை—தத்த
னனந்தனந்தி மெய்யிழைஞர்க் கன்றருள்வா னவ்வி
யனந்தனந்தி மெய்யா னகம்.

அத்திபல - அட்டகயங்கள். வால் அரசு நாகம் - வாலினையுடைய இராச சர்ப்பமாகிய ஆதிசேடன். மிசையுறல் - (ஆகிய இவைகளாற் சுமக்கப்பட்டு) அவைகளின் மேலே நிலைபெறுதல் என இப்பூமிக் கியையக்கொள்க. அத்தி - அத்திமரம். பலவு - பலாமரம். ஆல் - ஆலமரம். அரசு - அரசமரம். நாகம் - சுரபுன்னை. மிசையுறல் - வானிடத்தைப் பொருந்துதல் என நல்லூருக் கியையக்கொள்க. தத்தன் அனந்தன் நந்தி இழைஞர்க்கு - என்னுமிப் பெயர் களையுடைய (பராசரன்) சிறுவர்களுக்கு. அருள்வான் - திருவருள் செய்பவர். நவ்வியன் நந்தன் - மானை ஏந்திய சிவபெருமானுடைய திருக்குமாரர். அந்தி மெய்யான் - மாலைக்காலம் போன்ற செந்நிறம்வாய்ந்த திருமேனியை உடைய வர். (௨௮)

வச்சிரனல் லில்லான் மகிழரம்பை யாரிசைவா
லச்சுந் தரிநே ரணிநல்லை—மெய்ச்சிவநூன்
மாமலை யத்தவற்கே வாய்மலர்ந்தான் மன்னுதுடி
நாமலை யத்தவனல் லூர்.

வச்சிரன் நல் இல் - இந்திரனது நல்ல மனைவி. அரம்பையார் இசைவு - அரம்பையர்களது சேர்வு. சுந்தரி - இந்திராணி. என இந்திராணிக் கியையக் கொள்க. வச்சிரம் நல் இல் - வயிரமணிகள் பதித்த நல்ல மாளிகை. மகிழ் - மகிழ மரம். அரம்பை - வாழை. ஆர் - ஆத்தி. ஆகிய இம்மரங்களது செறி வினால் என நல்லூருக்கியையக் கொள்க. சிவநூல் - சைவாகமம். மலையத் தவன் - அகத்தியமுனிவர். துடி நாம லயத்தவன் - துடி என்னும் பெயரினை யுடைய கூத்தையுடையவர். அது செவ்வேள் கரிய கடலின் நடுவே நின்ற சூரபன்மனது வேற்றுருவாகிய வஞ்சத்தை அறிந்து அதன் நடுவண் திரையே அரங்கமாகின்று துடிகொட்டி ஆடியருளியதாம். அஃது ஐந்தங்கமுடைத்து. என்னை? "துடியாடல்வேன்முருகனுடலதனுக்கொடியாவுறப்போரைந்தாம்" என்றாராகலின். லயம் - முதற்போலி. (௨௯)

கந்துகமுந் தானைவேற் காளையருங் கன்னியருங்
கந்துகமுந் திக்களிகூர் நல்லூரே—சந்திரமா
மாவைப் பிழந்தார் மகிழ்பூப்ப வீரையிலோர்
மாவைப் பிழந்தார் மனை.

கந்து உக முந்து ஆனை - கட்டுத்தறி முரிய முந்துகின்ற யானை. ஆனை யினையும் வேற்படையினையுமுடைய காளையர் என்க. காளையர் கந்துகம் உந்தி - ஆடவர்கள் குதிரையைச் செலுத்தி. கன்னியர் கந்துகம் உந்தி - பெண்கள் பந்தினை அடித்து. சந்திரம் ஆம் மா வைப்பு இழந்தார் - பொன்னு திய பெரிய உலகினை இழந்த தேவர்கள். வீரை - கடல் ஓர் மாவைப் பிளந் தார் எனப் பிரிக்க. பிழத்தல் யமக நோக்கிய ளகரத் திரிபு. (௩௦)

வரும்.

## குமணவள்ளல்.

(சுo-ம் பக்கத்தொடர்ச்சி.)

இக்குமணவள்ளல் கொங்கநாட்டிலே அரசு செய்திருந்தவன். அவனது கோட்டை நிலைகுலைந்தும் அதன் பெருவனப்புக் குன்றாது இன்னும் நினைவுறுத்தி விளங்குகின்றது. இவ்வரசன் பெயர் செந்தமிழ்க்கடலுண்டு தேக்கிய பேராசிரியர்கள் வாய்க்கு இனிக்கும் தன்மையுடையது. நாற்பெருந்தானைகொண்டு புறப்பகையும், கல்வி சீலங்களாகிய கைப்படைகொண்டு காமமாகிய உட்பகையும் புறந்தரவெற்றிகொண்டு, முதிரமலையிற்றோன்றி ஆம்பிராவதியோடுகமழும் குதிரையாறு சேர்ந்த குமணமாநகரிலே அரசுவீற்றிருந்து செங்கோலோச்சி இவ்வுலகினைத் தண்குடை நீழலிலே குளிர்வுறச் செய்திருந்தான்.

இவனுக்கு இளங்குமணன் எனப் பெயரிய தம்பி ஒருவனுளன். அவன் அழுக்காறு விரவி உள்ளீடற்ற கொடிஞன். அவனது அறிவாகிய மதியினைப் பொருளாசை என்னும் இராகுவானது விழுங்கியதினால், உலோப குணமும் வந்து குடிகொள்ள அரசுரிமையிற் சென்ற அவாவினனாய் ஒருநாள் குமணனை நோக்கி இவ்வாறு கூறுவதானான்.

முன்னர் வந்துதித்த மூதறிவாளனே! வரைவின்றி யாவர்க்குமீதல், புகழ்வோர்க்கீதல், இரப்போர்க்கீதல் எனப்படும் கொடைவகைமூன்றனுள் ஒன்றன்பாற்பட்டு நின்றார் முன்னையோர் பலர். நினது கொள்கை அங்ஙனமுமன்று. மூவகைக் கொடையையும் ஈந்தே கடக்கும் கடப்பாடுடையையாய், நம்மரபினரீட்டி வைத்த பொருட் பெருங்கடல் சுவடறப்பருகும் முகிலினங்களை நிகர்த்தாய். அகத்துறவு பூண்ட அறிஞரும் போன்றாய். நினக்கு அரசுரிமை அடாது பொருளிற் சிறந்தது பிறிதொன்றுமில்லை.

எதனைவேண்டி இந்திரன்பதம் விரும்பப்படுகின்றது. நிதிபதிப் பெயரினால் குபேரன் அரனது தோழனுமாயினான். எம்பெருமான் வீற்றிருப்பது வெள்ளிமலையினன்றோ. அவர் திருக்கரத்தேந்தியது பொன்மலையன்றோ. வறுமையினாலுழன்று உணவின் பொருட்டு உலைந்து பேதுற்றுச் சொல்வன்மைகொண்டு புகழ்ந்துரைக்கும் வலையிலகப்படுத்தும் புலவர்கள்தாம் செல்வநிலையாமையைப் பற்பல ஏதுக்கள்கொண்டு சாதித்திடுவர். தங்கருமம் முடிப்ப அவர் கூறும் வெற்றுரைகள் நின்பாற் பயன்படுவவுமாயின. செல்வப்பொருளினும்கல்விப்பொருளே விழுமியதென்னுமப்புலவர்கள்தாமே, அச்செல்வப்பொருட்பேறு கருதியன்றே நின்பால் வந்தீண்டுவது. கல்வி அறிவுடையரேனும் நிதியிலராயின் அவர் நீணகர் வாழ்வொருவிக் காட்டில் வதிதலே நலமுடையதாகும்.

வரும்.

---

உ

யாழ்ப்பாணம் வண்ணைநகர்

ஸ்ரீ. வயித்தீசுவரசுவாமிகோயிலிலே

மார்கழிமாசத் திருவாதிரையிலே

சந்நிதானத்திலே ஓதப்பட்டுவரும்

## திருவூடல்.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார் திருவுளக் குறிப்பின்படி சுவாமி சந்நிதானத்திற் பணிந்தமொழியும் தணிந்தநடையும் ஒதுக்கிய ஆடையும் புதைத்தவாயுமுடையராய் வந்து, தமது ஆன்மநாயகராகிய சிவபெருமானுடைய சரணாரவிந்தங்களைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அஞ்சலியஸ்தராய் நின்றாராக.

பண்—நேரிசை.

நம்பியாரூரன்வந்தான்நாவலூர்நம்பிவந்தான், உம்பராலறியவொண்ணா வுண்மைகளுரைப்பான்வந்தான், செம்பொனால்மதில்கள்சூழ்ந்ததிகழ்செல்வத்திருவாரூரிற், றம்பிரான்றோழன்வந்தானென்றனதாரைசின்னம்.

வசனம்.

சுவாமி சுந்தரமூர்த்திநாயனாரை அழைத்துத் திருவூடல் தீர்க்கும் திருவருட்குறிப்பாகப் பரிவட்டங்கட்டி விடுத்தருளும்பொழுது சுவாமி சந்நிதானத்திலே ஓதுகின்ற தேவாரம்.

பண்—கொல்லிக்கௌவாணம்.

பத்தூர்புக்கிரந்துண்டுபலபதிகம்பாடிப்பாவையரைக்கிறிபேசிப்படிறாடித்திரிவீர், செத்தார்தமெலும்பணிந்துசேவேறித்திரிவீர்செல்வத்தைமறைத்துவைத்தீரெனக்கொருநாளிரங்கீர், முத்தாரமிலங்

கிமிளிர்மணிவயிரக்கோவை யவைபூணத்தந்தருளி மெய்க்கினிதாநாறும், கத்தூரிகமழ்சாந்தும்பணித் தருளவேண்டுங்கடனாகைக்காரோணமேவியிருந்தீரே.

வசனம்.

இந்தத் தேவாரத்தைச் சுவாமி சந்நிதானத்திலே ஓதி விண்ணப்பஞ்செய்து நின்றபொழுது சுந்தரமூர்த்திநாயனாருக்குச் சுவாமி திருவுளம் பற்றுமாறு.

முன்னே பரவையாருக்கும் உமக்குமுண்டான ஊடலை நாமல்லவோ தீர்த்துவிட்டோம். நீரும் நம்முடைய ஊடலைப் போய்த்தீர்த்துப் பார்ப்பதியாரை அழைத்துவாரும் என்று சுவாமி திருவருள் செய்தலும் தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்திநாயனார் பார்ப்பதிதேவியார் சந்நிதானத்தை அடைந்து விண்ணப்பஞ்செய்து வினவி விடைகொண்டு ஓதுகின்ற

தேவாரம்.

பண்—கொல்லி.

ஒருத்திதன் தலைச்சென்றாளைக்கரந்திட்டானுலக மேத்த, ஒருத்திக்குநல்லனாகிமறுப்படுத்தொளித்து மீண்டே, யொருத்தியைப்பாகம்வைத்தானுணர்வினாலையமுண்ணி, யொருத்திக்குநல்லனல்லனொற்றியூருடையகோவே.

திருவிருத்தம்.

கற்றூர்பயில்கடனாகைக்காரோணைத்தெங்கண்ணுதலே, விற்றூங்கியகரம்வேனெடுங்கண்ணிவியன்கரமேல், நற்றூணெடுஞ்சிலைநாண்வலித்தகரநின்கரமே, செற்றூர்புரஞ்செற்றசேவகமென்னைகொல்செப்புமினே.

வசனம்.

இந்தத் தேவாரங்களை ஓதிச் சுந்தரமூர்த்திநாயனார் பார்ப்பதியாருக்கு விண்ணப்பஞ் செய்வது.

அநாதிநித்திய சச்சிதாநந்த சோதிஸ்வரூபராகிய எம் இறைவர் செய்தருளும் சிருட்டித்திதி சங்கார திரோத்பாவானுக்கிரகமென்று சொல்லப்படும் பஞ்சகிருத்தியாவசரத்தில்தேவரீரையன்றி அங்கொன்றுமில்லை. இன்னும் அப்பெருமானார் திரிபுரதகனஞ்செய்தருளும்பொழுதும் தேவரீர் விற்பிடித்து நிற்கவன்றே, வெற்றியுற்றருளியது. ஆதலினால் எவ்வாற்றானுந் திருவுளமிரங்கி எம்பெருமான்பால் எழுந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து நிற்றலும் பார்ப்பதிதேவியார் சுந்தரமூர்த்திநாயனாரை நோக்கித் திருவுளம்பற்றுமாறு.

எமக்குமொருத்தி எதிரியாகிச் சககளத்தியாயினாள். அவளுடன் நாம் வேறுபாடானோம் என்றார் என்றுஞ்சொன்னீர். ஆதலினால் நீரும் நல்ல வித்துவானேயாம். உமது கர்த்தாவும் மிகப் பெரியவரேயாம். இவைகளெல்லாம் உம்மிருவர்க்குமே ஒக்கும். நீர் அப்பாற்செல்லுமென்று சேடியருந் தாமுமாக ஆக்ஷேபஞ்செய்து பிடித்து வெளியே தள்ளிவிடுதலும், சுந்தரமூர்த்திநாயனார் சுவாமிசந்நிதானத்தை அடைந்து இவைகளையெல்லாம் விண்ணப்பஞ் செய்து வினவி ஓதுகின்ற தேவாரம்.

பண்—சீகாமரம்.

மங்கைவாணுதன்மான்மனத்திடைவாடியூடமணங்கமழ்சடைக், கங்கையாளிருந்தகருத்தாயதென்னைகொலாம், பங்கயமதுவுண்டுவண்டிசைபாடமாமயிலாடவிண்முழ, வங்கையாலதிர்க்குமாமாத்தூரம்மானே.

பண்—கொல்லிக்கௌவாணம்.

பூண்பதோரிளவாமைபொருவிடையொன்றேறிப் பொல்லாதவேடங்கொண்டெல்லாருங்காணப், பாண்பேசிப்படுதலையிற்பலிகொள்கைதவிரீர் பாம்பினொடுபடர்சடைமேல்மதிவைத்தபண்பீர், வீண்பேசிமடவார்கைவெள்வளைகள்கொண்டால்வெற்பரையன்மடப்பாவைபொறுக்குமோசொல்லீர், காண்பினியமணிமாடநிறைந்தநெடுவீதிக் கடனாகைக் காரோணமேவியிருந்தீரே.

வசனம்.

இந்தத்தேவாரங்களை ஓதிநின்றபொழுது சுந்தரமூர்த்திநாயனாருக்குச் சுவாமி திருவுளம் பற்றுமாறு. நாம் தலைஅன்புகொண்டு இருவரையும் ஒன்றாகவைத்துச் சமமாகநடத்துவோமென்றுசொல்லி, எவ்வாற்றானும் சம்மதிப்பித்து அழைத்துவாருமென்று திருவருள் செய்தலும் சுந்தரமூர்த்திநாயனார் பார்ப்பதிதேவியார் சந்நிதானத்தை அடைந்து வினவி ஓதுகின்ற தேவாரம்.

பண்—இந்தளம்.

கங்கையைச்சடையுள்வைத்தார்கதிர்ப்பொறியரவும்வைத்தார், திங்களைத்திகழவைத்தார்திசைதிசைதொழவும்வைத்தார், மங்கையைப்பாகம்வைத்தார் மான்மறிமழுவும்வைத்தா, ரங்கையுளனலும்வைத்தாரையனையாறனாரே.

### வசனம்.

இந்தத் தேவாரத்தை ஓதிநின்றபொழுது பார்ப்பதிதேவியார் திருவுளம் பற்றுமாறு. என்னை ஒரு பாகத்தே வைத்தாரென்றும் எனக்கெதிராகக் கங்கையாளைச் சடையினிற் கரந்து வைத்தார் என்றுஞ்சொன்னீர். ஆதலினால் என்னிலும் அவள் விசிட்டமுடையள். அவரினும் நீர் விசிட்டமுடையீர்; நீரும் நல்ல புத்திமானேயாம்; உம்முடைய கர்த்தாவும் மிகப் பெரியரேயாம் என்று வைதுரைத்துச் சேடியருந் தாமுமாக ஆக்ஷேபஞ்செய்து அப்பாற் செல்லுமாறு தள்ளிஅடித்து வெளியே விடுத்தபொழுது சுந்தரமூர்த்திநாயனார் மகாமகத்துவம் பொருந்திய இருஷீச்சுவரர்களை அடைந்து இவைகளை எல்லாம் எடுத்துக் கூறி ஆகுமாறெவ்வாறென்று வினவியபொழுது அவர்கள் தம்முட்சிந்தித்துத் திருவுளம் பற்றுமாறு.

வாரீர் தம்பிரான் தோழரே! நீவிர் அறியாததொன்றுமில்லை. தோழமைப் பேறு கொண்டமையின் நீவிர் முன் தொண்டர்நாதனைத் தூதிடை விடுத்துப்பின் இவ்வருஞ்செயற் குரியருமாயினீர்.

நாம் இதனைச் சிந்தித்தற்குமுரியமோ. நீவிரும் கர்த்தாவும், உபநிடதங்களில் கேட்கப்படும் சில ஞானார்த்தங்களைப் புலப்படுத்தி உலகினர்க்கறிவுறுத்தவே, சாங்கியார்த்தமாயுள்ள இத்திருவூடலைச் செய்தருளினீர்கள். இதன் சூக்குமார்த்தம் மற்றையோர் மனோவாக்கிற் கெட்டாதது. இப்பரமரகசிய சாரமும் அவரருளால் ஒருசிறிது எமக்கும் புலனாயிற்று. இதன் நுண்பொருள்களை விளங்க வைத்து நீவிர் தேவாரப் பதிகமொன்று அருளல் வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டு பின்னும் திருவுளம் பற்றுகின்றார்.

ஆலாலசுந்தரரே. முன்னே கயிலையங்கிரியை இராவணன் தூக்கியபொழுது நிகழ்ந்தன நீவிரறியாததோ. சாமவேத பாராயணமே நல்ல உபாயமென்று கூறிவிடுத்தார்கள்.

சுந்தரமூர்த்திநாயனார் சுவாமி சந்நிதானத்தை அடைந்து ஓதுகின்றதேவாரம்.

### பண்—திருநேரிசை.

விண்ணினார்விண்ணின்மிக்கார்வேதங்கள்விரும்பியோதப், பண்ணினார்கின்னரங்கள்பத்தர்கள்பாடியாடக், கண்ணினார்கண்ணினுள்ளேசோதியாய்நின்றவெந்தை, மண்ணினார்வலங்கொண்டேத்துமாமறைக்காடனாரே.

### பண்—கொல்லிக்கௌவாணம்.

தூசுடையவகலல்குற்றூமொழியாளூடல்தொலையாதகாலத்தோர்சொற்பாடாய்வந்து, தேசுடைய விலங்கையர்கோன் வரையெடுக்கவடர்த்துத்திப்பியகீதம்பாடத்தேரொடுவாள்கொடுத்தீர், நேசமுடையடியவர்கள்வருந்தாமை யருந்தநிறைமறையோருறைவீழிமிழலைதனில்நித்தல், காசருளிச்செய்தீரின்றெனக்கருளவேண்டுங்கடனாகைக்காரோணமேவியிருந்தீரே.

### திருநேரிசை.

கங்கைநீர்சடையுள்வைக்கக்காண்டலுமங்கையூடத். தென்னையான்றேர்கடாவிச்சென்றெடுத்தான்மலையை, முன்கையானரம்புவெட்டிமுன்னிருக்கிசைகள்பாட, அங்கைவாளருளினானாரணிமறைக்காடுதானே.

### வசனம்.

இந்தத் தேவாரங்களை ஓதி விண்ணப்பஞ்செய்வது.

சுவாமி. புழுத்தநாயினுங்கடைப்பட்ட அடியேன் நும்மிருவருக்கும் வெறுப்புடையனாயினேன். ஆயினும் முன்னோர் காலத்திலே இராவணேசுவரன் கயிலையங்கிரியைத் தோள்கொண்டு தூக்கி நெரிவுற்றபொழுது, அவன் தன் தலையிலொன்றைக் கிள்ளி அதிலே நரம்பினைத் தந்திரியாகப்பூட்டி வீணை ஆக்கி அதிலே இசைநுணுக்கம் தோன்றச் சாமவேத கானஞ் செய்தது திருச்செவிசாத்தியன்றே. பார்ப்பதிதேவியார் திருவுளமிரங்கி மகிழ்ந்து அவனுக்கு அனுக்கிரகஞ் செய்தருளியது.

ஆதலின் தேவரீரும் சாமவேதகானஞ் செய்யின் தேவியார் திருவுளமிரங்குவர் என்று விண்ணப்பஞ் செய்தலும்; ஊடலும் கூடலும் பயனும் ஊட்டுபவரும் யாவும் தாமேயாகிய காமாந்தகமூர்த்தி தோழனே; அப்படியே ஆகுக என்று அருளிக் கங்கையைச் சடையினுள்ளே சுவறக்கரந்துவைத்துச் சாமவேதகானம் செய்தருளினார்.

இதற்குள் சுந்தரமூர்த்திநாயனார் பார்ப்பதிதேவியார் சந்நிதானத்தை அடைந்து வினவி ஓதுகின்ற தேவாரம்.

### திருநேரிசை.

சூடினார்கங்கையாளைச்சூடியதுழனிகேட்டங்
கூடினாணங்கையாளூமூடலையொழிக்கவேண்டிப்

பாடினார்சாமவேதம்பாடியபாணியாலே
யாடினார்கெடிலவேலியதிகைவீரட்டனாரே.

இந்தத்தேவாரத்தை ஓதிச் சுந்தரமூர்த்திநாயனார் விண்ணப்பஞ் செய்வது.

அங்கயற்கணம்மையே, மரகதப்பூங்கொம்பே, அருட்கொடியே, ஒன்றே பலவுருவாமோதிமமே, ஆடவர் ஒழுக்கிறந்து இழுக்குறினும் கற்புடைமகளிர் பலருமறியத் தூற்றுதல்செய்யமாட்டார். பண்டேமாயோன் ஆயர்பாடியிலே கோபாலர் மனைவியரைக் கூடி அணைந்திருந்தும் இலக்குமிதேவி மனநிலை திரிவுற்றுப் பழிப்புரைகள் எதும் பகர்ந்தனளோ? இந்திரன் அகலிகையிடத்தில் மோகமுற்ற காரணத்தினால் மேனி எங்கும் கண்ணாகி நாணிவந்தபொழுதும் இந்திராணி நிந்தித்தேதும் உரைத்தனளோ? சந்திரன் குருதார கமனஞ் செய்து உடற் களங்கமுற்றுத் தேய்வுறுவது கண்டும் உரோகிணி வெறுத்து நீக்கி ஊடினாளோ?

ஆதலாற் தேவரீர் இவைகளைத் திருவுளத்தடைத்துத் திருவூடல் தணிந்து வேதசொரூபராகிய எம்பெருமான் சாமகீதம் பாடியருள்கின்றார். திருச்செவிசாய்த்தருளுக என்று பிரார்த்தித்து நின்றார்.

---

## சாமவேதம்.

பராபரவஸ்துவாகிய எம்பெருமான் உபநிஷார்த்தத்தை உலகியலில் வைத்தும் நடித்துக்காட்டும் நாடகமுகத்தான் நம்மனோர்க்கு விளக்கிக்காட்டத் திருவுளங்கொண்டு பாடியருளிய சாமவேதகானவோசை திருச்செவிகளிற் சார்தலும் தேவியார் திருவுளமகிழ்ந்து தன்வசமழிந்து சுவாமி இடத்திலே எழுந்தருளிவந்து இருவரும் கூடித் திருக்காட்சிதந்து நிற்றலும் சுந்தரமூர்த்திநாயனார் ஓதுகின்ற

தேவாரம்.

திருநேரிசை.

கூடினாருமைதன்னோடேகுறிப்புடைவேடங்கொண்டு, சூடினார்கங்கையாளைச்சுவறிடுசடையர்போலும், பாடினார்சாமவேதம்பைம்பொழிற்பழனமேயார், ஆடினார்காளிகாணவாலங்காட்டடிகளாரே.

திருத்தாண்டகம்.

முன்னமவனுடையநாமங்கேட்டாண்மூர்த்தியவனிருக்கும்வண்ணங்கேட்டாள், பின்னையவனுடையவாரூர்கேட்டாள் பெயர்த்துமவனுக்கேபிச்சியானாள், அன்னையையுமத்தனையுமன்றேநீத்தாளகன்றாளகலிடத்தாராசாரத்தைத், தன்னைமறந்தாடன்னாமங்கெட்டாடலைப்பட்டா ணங்கைதலைவன்றாளே.

திருவாசகம்

தென்பாலுகந்தாடுந்தில்லைச்சிற்றம்பலவன்
பெண்பாலுகந்தான்பெரும்பித்தன்காணேடீ
பெண்பாலுகந்திலனேற்பேதாயிருநிலத்தோர்
விண்பாலியோகெய்திவீடுவர்காண்சாழலோ.

வரும்.

---

## விஞ்ஞாபனம்.

யாழ்ப்பாணம் வண்ணைநகர் ஸ்ரீ. வைத்தீஸ்வரசுவாமி கோயிலிலே மார்கழிமாசத் திருவாதிரை மகோற்சவதினத்திலே ஸ்ரீ. சுந்தரமூர்த்திநாயனாரை எழுந்தருளப்பண்ணிச் சுவாமி சந்நிதானத்திலும் தேவிசந்நிதானத்திலும் இத் திருவூடல் முறையே ஓதப்பட்டு வருகின்றது. இதனைக்கேட்டு உய்வுறக்கருதி மெய்யன்பர்களாகிய நம்மவரனைவரும் மிக முயன்றும், திருவிழாத் தரிசனத்தின் பொருட்டுவந்து ஈண்டிச் சேவித்துநிற்கும் சனசமூகத்தினின்று எழும்பேரொலியினால் தம் கருத்து முற்றுறாது மனம்வருந்த மீண்டு செல்பவர்களுமாகின்றார்கள். வாசிக்கப்பட்ட பிரதியும் எவ்வாற்றானும் எவர்களுக்கும் கிடைப்பதுமரிது.

இவைகளை நோக்கிஷை கோயில் ஆதீனகர்த்தரும் மானேஜருமாகிய ஸ்ரீமான். பொ. க. பொன்னுச்சாமிச்செட்டியாரவர்கள். இத்திருவூடலை அச்சிட்டு வெளிப்படுத்தும்படி அறிவித்தார்கள். அவர்கள் விருப்பத்தின்படி இப்பொழுது வெளிப்படுத்தலாயிற்று.

இது நிற்க. அளவிறந்த கீர்த்தனங்களையும் பதிகங்களையும் திருவூஞ்சல், சுக்கிரவாரந்தோறும் தேவியார் எழுந்தருளித் திருவுலாப் போதுங்கால் ஓதப்படுமாறு முதைசுவரிய மகௌதாரிய மகாப்பிரபுவாகிய ஸ்ரீ. வைத்திலிங்கச்செட்டியாரவர்கள் இச்சிவாலயத்தைக் கட்டுவித்துப் பிரதிட்டை செய்வித்த வரலாறுகளை விளங்கவைத்து ஓர் கலிவெண்பா, ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி திருவூஞ்சல், சூர்ணிகை என்று இத்தொடக்கத்தனவாகிய பிர

பந்தங்களையும் இச்சிவாலயத்தின்பொருட்டு இயற்றித் தந்துதவிய பாரத்துவாசி. பிரமஸ்ரீ. அனந்தசுப்பையர் (பிராமணமுதலியார் என்று அழைக்கப்படும் கொச்சிக் கணேசையரவர்கள் புதல்வர்) என்பவரே இத்திருவூடலையும் தம் கையினால் எழுதப்பட்டதென்று கைச்சாத்திட்டு எழுதி வைத்திருக்கின்றார்கள். இன்னும் அப்பிரதியின் இறுதியில் "சோழதேசம் வைத்தீஸ்வரன்கோயில் ஆதீனத்தினின்றும் எடுத்தனுப்பிவைத்த பிரதிகொண்டு புதுக்கப்பட்டது" என்றும் எழுதப்பட்டிருக்கின்றது.

இவ்வேட்டுப் பிரதியொன்றனைக் கொண்டே அச்சிடத்துணிதல் முறையன்று எனவெண்ணியே முன்னாம் இக்கோயிற் கீர்த்தனங்கள் திருவூஞ்சல் முதலியன அச்சிட்டபொழுது இதனையும்சேர்த்து அச்சிடாதுவிடுத்தது.

ஆயின் இப்பொழுது ஷை ஆதீனகர்த்தரவர்கள் சிலகாலம் செல்லின் இதுவும் எவ்வாறுமோ உள்ளதை உள்ளபடியே வெளியிடுங்கள்' என வற்புறுத்தித் தூண்டினமையின் அச்சிட்டோம். தொடங்கிய பின் பிரமஸ்ரீ. சு. சிவகடாட்சக்குருக்கள் அவர்களிடம் ஒருபிரதி இருப்பதாகவுமறிந்து அவர்களிடம் சென்று கேட்டபொழுது உடனே அவர்கள் தாம் வேதாரணியம் தேவஸ்தானத்திலிருந்து தருவித்து எழுதிவைத்திருந்த பிரதியொன்றைத் தந்துதவினார்கள்.

இதுவே நாம் ஆராய்ந்து அச்சிடுவதற்குப் பிரதான சாதனமாயிருந்தது. ஆதலாற் குருக்களவர்கள் தந்துபகரித்த பெருஞ்செயலை மறவாது பாராட்டி அவர்களுக்கு மனப்பூர்வமாகத் துதிசெய்கின்றோம்.

இப்பரோபகாரசீலர் யாவரென்று ஒருசிறிது கூறுவது எமக்குக் கடப்பாடாயிற்று. இவர்கள் திரிசிரபுரத்தினின்றும் அழைக்கப்பட்டு ஷை கோயிலிலே பரம்பரையாகச் சைவாசாரியர்களாகவிருந்த ஆதிசைவப் பிராமணகுலத்திலே தோன்றியவரும் நம் தவப்பயனாய்வந்து அவதாரஞ்செய்த ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களாலும் பாராட்டப்பட்டவர்களும் ஆகிய பிரமஸ்ரீ. சு. முத்துக்குருக்கள் அவர்கள் பௌத்திரன். சைவாகமக்கிரியாபாகங்களைச் சுலோகார்த்த விளக்கத்துடன் செய்வதில் அதிக திறமைபடைத்தவர்கள். ஷை முத்துக்குருக்களவர்களால் எழுதப்பட்டு இவர்களிடத்து இன்றுங் காணப்படும் சைவாகமங்கள் பாஷியங்கள் சித்தாந்தநூல்கள் உரைகள் எத்தனையோ பல. நேரே பார்த்தவர்களுக்கே அவற்றின் அருமை பெருமைகள் புலப்படும்.

இவர்கள் அம்பிக்குருக்கள் என மற்றோர்நாமத்தினால் சாதாரணமாயழைக்கப்படுவோர்கள்.

கல்வி கேள்விகளாற் சிறந்து விளங்கிய அருங்குலத்துதித்த ஷை குருக்களவர்கள் பரோபகாரமாகச் செய்துதவிய இப்பெருநன்றி எவராலும் பாராட்டத்தக்கதேயாம்.

☞ இத் திருவூடல் விரைவில் புத்தக ரூபமாகவும் வெளிப்படுத்தப்படும்.

# தலயாத்திரைப் பொதுவிதி.

(௫௨-ம் பக்கத்தொடர்ச்சி.)

## தர்ப்பணவிதி.

தர்ப்பணம் நித்தியதர்ப்பணம், நைமித்திகதர்ப்பணம், சிராத்தாங்கதர்ப்பணம் என மூவகைப்படும். நித்தியதர்ப்பணம் ஸ்நானாங்கதர்ப்பணம், பிரமயக்ஞதர்ப்பணம் என இருவகைப்படும்.

அவற்றுள் ஸ்நானாங்கதர்ப்பணம், மார்ச்சனம், அகமருடணம் மந்திரம் என்னும் மூவகை ஸ்நானாங்கங்களும் செய்தவுடன், கிழக்குமுகமாய் நாபியளவு சலத்தில்நின்று உபவீதியாய் தேவதீர்த்தத்தால் தேவர்க் கோர்காலும், வடக்குமுகமாய் நிவீதியாய்ப் பிராசாபத்திய தீர்த்தத்தால் முனிவர்க்கு இருகாலும், தெற்குமுகமாய் பிராசீனாவீதியாய் எள்ளோடு பிதிர்தீர்த்தத்தால் பிதிர்கட்கு முக்காலும், தர்ப்பணத்துக் கேற்ற அந்தமாகத் தர்ப்பித்துக் கரையில் வஸ்திரநிட்பீடனஞ் செய்தல்.

மத்தியானத்தில் ஸ்நானாங்கதர்ப்பணமும் வஸ்திரநிட்பீடனமும் இல்லை.

இவை உதயத்தில் நித்தியஸ்நானாங்கம் செய்யும் பொழுது சந்தியாவந்தனத்துக்குமுன் செய்யப்படும்.

மாத்தியாந்நிகஞ் செய்து அதன்மேற் பிரமயக்ஞஞ் செய்வர். அப்பிரமயக்ஞத்து நாமகோத்திரங்களோடு தனித்தனி பிதிர் தர்ப்பணமுஞ் செய்யப்படும்.

இப் பிதிர்தர்ப்பணம் ஈரவஸ்திரவுடையார் சலத்தினும் உலர்ந்த வஸ்திரமுடையார் கரையினும் செய்யவேண்டும். கரையிலிருந்து செய்யுங்கால் மட்பாத்திரம் நீக்கி வெள்ளி, பொன், தாமிரம், வெண்கலம், உதும்பரம், கட்கபாத்திரம் என்னும் இவைகளில் ஒன்றினால் தர்ப்பணஞ் செய்யலாம்.

தர்ப்பணஞ்செய்யும்பொழுது விசேடமாய்ப் பிராமணன் சர்மாந்தமாகவும் க்ஷத்திரியன் வர்மாந்தமாகவும், வைசியன் குப்தாந்தமாகவும், சூத்திரன் தாசாந்தமாகவும், பிதிர்களது கோத்திரத்தோடு நாமங்களை உச்சரிக்கவேண்டும்.

சிவதீக்ஷையுடைய நாலு வருணத்தாரும் கோத்திரங்களையும் முறையே சிவ. தேவ. குப்த. கணனென்னு மந்திரத்தோடு தீக்ஷாநாமங்களையும், தர்ப்பணாதிகளில் உச்சரிப்பர்.

வரும்.

சிவ. இ. மாரிமுத்து உபாத்தியாயர்
வண்ணார்பண்ணை.

---

மங்கையர்க்கரசி என்னும்

## கமலாம்பிகைசரித்திரம்.

(௬௦-ம் பக்கத்தொடர்ச்சி.)

அப்பொழுது அப்பெண்மணியினது கண்களினின்றும் வெண்முத்தனைய நீர்த்துளிகள் களகளவென்றுதிர்ந்து ஆறாகவோடின. அவள் கருமேகமன்ன கூந்தலை வாரிக் கொண்டையிட்டு முடிந்து விரிந்த இதழ்களையுடைய கோங்கமலர்களையும் வெட்சிமலர்களையும் இடையிடையே வைத்துமுடித்து அதன்மத்தியில் வாசனைபொருந்திய ஒரு ரோசாப் புஷ்பத்தைச் சொருகியிருந்தாள். இரு கண்களுக்கும் புருவங்களுக்கும் இடையே எட்டாநாட் பிறைபோன்ற நெற்றியில் கஸ்தூரி புனுகு சவ்வாது முதலியவைகளினால் உண்டாக்கப்பட்ட கரிய திலதத்தை அணிந்திருத்தலும் அளகத்திலே சுட்டியாபரணத்தை அணிந்திருத்தலும் எப்படி இருந்ததெனில் பாம்பொன்று கூந்தலினின்றும் இழிந்துவந்து நஞ்சைக் கக்கியவாறுபோன்றிருந்தது. கண்ணுக்கு மையிட்டிருந்தது, கருமையானது தன்னிறம் போதாதென்று மிக்க கருமையைப் பெற்றுக்கொள்வதற்கு வந்து குடிகொண்டாற்போன்றிருந்தது. இரு காதுகளிலும் பூரண சந்திரனைப்போன்ற வைரக்கம்மல்கள் பிரகாசித்தன. கழுத்தில் நமது பெண்கள் அநாகரீகமாக ஏராளமான நகைகளை அணிவதுபோலல்லாது ஒரு முத்துமாலையும் அட்டிகையும் அணிந்திருந்தாள். முகப்பில் வைரம்பதித்த காப்பை கையில் அணிந்திருந்தாள். பாற்சமுத்திரத்தில் விட்டுணு பள்ளிகொண்டாற்போல இடையில் வெண்பட்டுப்பாவாடைதரித்து தோளின்மீது மரகதவர்ணப் பட்டாடையினால், தாவணி அணிந்திருந்தாள். அவள் கண்டோர் மயங்குங் கட்டழகியான மோகினியாயிருந்தும் மனதிற் பொருந்திய கவலையினால் துக்கமுடையவளாகவே காணப்பட்டாள். நமது கதாநாயகியே இப்பெண்மணியென்று நாம் சொல்லாமலே விளங்கும். அவள் என் துக்கித்தல்வேண்டுமெனில் பின்னால் வரும் சரித்திரத்தால் நன்கு விளங்கும். அப்பொழுது அவளின் உயிர்ச்சேடியாகிய புஷ்பகாந்தியென்பாள், அவளை அறியாமல் அவளுக்குப் பின் பக்கத்தில் வந்துநின்று அவளின் நிலைமையைக்கண்டு திடுக்குற்று மனவருத்தமுடையவளாய் நேரேபோய்ப் பின் வருமாறு கூறுகின்றாள்.

புஷ்பகாந்தி:—வீரவிக்ரம மகாராசன் பெற்றெடுத்த அருந்தவக்குயிலே! எங்களுடைய பிராணநேசமே! தேன்மொழியே! தங்களுக்கு வந்துற்ற வருத்தமென்னை? ஏனம்மா நீங்கள் இப்படிப் புலம்பியழல்வேண்டும்? கண்களிரண்டும் கோவைக் கனிபோலச் சிவந்துதோன்றுகின்றனவே. தங்களை அரண்மனைமுழுவதும் காணப்பெறாமல் இங்கு தேடிக்கொண்டுவந்தேன் தங்களுக்கு சம்பவித்த துன்பம் யாது?

கமலாம்பிகை—: சகியே! என்னுடைய துன்பத்தை உன்னிடம்சொல்லாமல் வேறுயாரிடம் சொல்லப்போகின்றேன்; அடிநேசியே! என்னைச் சற்றேதாங்கிக்கொள்ளுவாய் எனக்கு ஆயாசமாகவிருக்கின்றது என்று சொல்லி அவள் மடிமீது சாய்ந்தாள். தலைவி மூர்ச்சையுற்றதைக் கண்ட புஷ்பகாந்தி துடிதுடித்து பனிநீர் தெளித்தல் மயில்விசிறிகொண்டுவீசுதல் முதலியபலவித சயித்தியோபசாரங்களினாலும் அவளுடைய மயக்கத்தைத் தெளிவித்தாள். அப்பொழுது மற்றொரு சேடியாகிய காஞ்சனமாலை அங்கு ஓடிவந்து கமலாம்பிகையின் பரிதாப நிலைமையைக் கண்டும் புஷ்பகாந்தியால்கேள்வியுற்றும்வருந்தினாள். பின்பு சேடியரிருவரும் பலவிதமான புத்திமதிகளைச் சொல்லித் துக்கமுண்டான காரணத்தையும் கேட்டனர்.

வரும்.

மா. சிவராமலிங்கம்பிள்ளை
ஆறுமுகநாவலர்வாசிகசாலை
வண்ணார்பண்ணை.

# புத்தகவரவு.

விஜயசுந்தரம். கமலாக்ஷி.

என்னும் இவ்விரு புத்தகங்களும் வரப்பெற்றோம். இவற்றுள் கமலாக்ஷியின் அருமை பெருமைகள் அடுத்த பத்திரிகையில் எழுதப்படும்.

## விஜயசுந்தரம்.

இது செந்தமிழ்நடையிலே வைதிக லௌகிக வியவகாரங்களை விளக்கி எழுதப்பட்ட ஒரு கற்பனை சரித்திரம். இதில் ஆங்கிலேயபண்டிதர்கள் கொள்கைகளையும் பரக்கக்காணலாம்.

முதலாம் அத்தியாயத்தில், செல்வப்பெருக்கிலாழ்ந்து கல்விப்பயிர்சியில் ஊக்கமின்றி வளரும் இளஞ்சிறார்களின் கொஞ்சுமொழிகளைத் தாய்தந்தையர் கேட்கலாகாதென்பதும், கல்வியினுயர்வும் அதனை வலியுறுத்தற்குவேண்டும் மேற்கோள்களும் பிறவும் காணப்படும்.

இரண்டாம் அத்தியாயத்தில், சிற்றினமாயுள்ளாரைத் தன் மனைமக்கள் வாழ்வுறும் இல்லகத்தே தம்முடன் அழைத்துச்செல்லின் பதிவிரதாதர்மம் அம்மனையைவிட்டகலுதற்கு ஏதுவாகி வழியலா வழியில் அவர்மனம் செல்லுமென்பதும், பரத்தையர்கள் சிறிதுகாலம் இல்லறக்கிழத்திபோன்றிருந்து சாவிற் சாவேமென்றும் நடித்துக் காலம் பார்த்திருந்து பல்வகைத்தந்திரோபாயங்களினால் பொருள்களையும் நிலங்களையும் வஞ்சித்துக்கொண்டு உயிரொன்றுமேயொழியத் தாம் நல்கும் வியாதியே தங்களால் மற்றையுடலையுங் கவர்ந்துவிடும் தன்மையுடையாரென வரைவின்மகளிரியல்பும் பிறவும் விரிவுற விளக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் அத்தியாயத்தில், வட்டியினால் வரும் பொருள்வருவாயை நோக்கி முதலை இழத்தலாகாதென்பதும், கடன்வாங்கிக் கடன்கொடுத்தல் இறுதியில் தமக்குக் கேடுபயக்குமென்பதும், கல்வியும் நல்லொழுக்கமு முடையோர் எங்கே செல்லினும் நன்குமதிக்கற் பாடுடையராவரென்பதும், நல்வினையின் பயனை நுகருங்கால் அதற்குச் சாதனமாய் நிற்பவர்களை விரும்புமாறுபோலத் தீவினையின் பயனை நுகருங்கால் அதற்குச் சாதனமாய் நிற்பவர்களை விரும்பாது வெறுத்தல் பேதைமையேயாமென்பதும், கோபமே தீமைகளுக்கெல்லாம் ஓர் மூலகாரணமென்பதும், உலோபகுணமுடைமை தம்மனைமக்களாயுள்ளோரை அஞ்சச்செய்யுமென்பதும், அவ்வச்சங் காரணமாகச்செய்யும் செயல்களை அவர்கள் மறைத்தே செய்வரென்பதும், அவை வெளிப்படுங்கால் ஒன்றை மற்றொன்றாய்த் திரித்துணர்தற்கு ஏதுவாய் நிற்குமென்பதும், அத்திரிபுணர்ச்சி இறுதிவரையும் பெருந்துன்பத்தையே தந்துநிற்குமென்பதும் வணங்கிய வாயினராதல் நுணங்கிய கேள்வியுடையார்க்குப் பேரழகைத் தருமென்பதும் பிறவும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

நான்காம் அத்தியாயத்தில், குறித்தகாலத்திற்குரிய போசனஞ்செய்தபின் விதிக்கப்பட்டிருந்த தத்தம் முயற்சிகளில் செல்லாது சிற்றுணவகைகளருந்தி வீண்காலங்கழிப்பின் அவர்மனம் சூதாடல் முதலிய தீச்செயல்களிலே பற்றிநிற்குமென்பதும், சிற்றினச்சார்பு நல்வழியிற் செல்லவொட்டாது தடுத்து மக்களுட் பதடிகளென ஆக்கிவிடுமென்பதும், கீழ்மக்களோடு கூடி வரைவிலாப் பொருட்செலவுடையோர் உரிமையும் முறைமையும் நோக்காது அன்பு அருள் கண்ணோட்டம் முதலிய நற்குணங்களின்றிப் பெரியாரைப் பேணுதல் செய்யாரென்பதும்; அறிவொற்றுமை பற்றிப் பெரியாரைப் பெரியாரே பேணுவரென்பதும், உற்றவிடத்துதவுதலே அறத்தினுட் தலையாயதென்பதும் பிறவும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

ஐந்தாம் அத்தியாயத்தில், கல்விஅறிவுடன் கூடிய ஆண்டன்மையுடையோன் பிறர்க்கு வந்துற்ற இடுக்கண்கண்டு அழியாது வேண்டுவ விரைவினெண்ணித் தம்முயிர்க்கிறுதிநோக்காது அறத்தினதுறுதிநோக்கி மன்னுயிரோம்புங் கடப்பாடுடையராவரென்பதும், உயர்குடிப் பிறந்தோர் ஒருவர்க்குச் செய்த நன்றியைத் தம்வாயால் எடுத்துரையாரென்பதும், அது பாராட்டிப் புகழப்படுமிடத்தில் தாம் வெளிப்பட்டுச் செல்லுதற்கு நாணமுற்று மறைந்துவிடுவரென்பதும், வட்டியாற் பொருளீட்டுதல் மனுநூலுடையார்க்கு உடன்பாடன்றாமாதலின் சிவபுண்ணியத்தின்பொருட்டும் ஒருசிறிது விடுப்பதே அதற்கேற்ற பரிகாரமாமென்பதும், தத்தம் ஜனன தேசங்களிலிருந்துகொண்டு பெருந்தொகை முதல்விடுத்து ;ஒருவரை நியமித்துப் பிறதேசங்களுக்கு வியாபாரவிஷயமாக அனுப்பப்படவேண்டும் முறைகளும், அனுப்பப்பட்டோர் விசுவாசகாதமின்றி நடந்துகொள்ளவேண்டும் முறைகளும், இவ்விருபாலாரும் தமக்கு விதித்த வழிகளில் நிற்றலின்றித் தவறுவராயின் அவர்க்குவந்துறும் பொருட்கேடுகளும், வியாபார தந்திரோபாயங்

களும், அதனாற் பொருளை ஈட்டித் தொகுக்கும் நெறிமுறைகளும், வட்டியினாலன்றிப் பேரூதியம் அடைதற்கேற்ற வேறு வியாபார பேதங்களின் எடுத்துக்காட்டுகளும் பிறவும் அடிமுறை பிறழாது அமைக்கப்பட்டுள்ளன.

இன்னும் அவ்வத்தியாயத்தில் பூத்தருபுணர்ச்சி புனறருபுணர்ச்சி களிறுதருபுணர்ச்சி என அகப்பொருணூலுடையார் காட்டிய புணர்ச்சிவகைகளுள் கதாநாயகனாகிய விஜயசுந்தரம், சிவகாமி என்னும் பெண்ணின் உயிரைப் புறந்தந்த அறப்பெருஞ்செயலைப் புனறருபுணர்ச்சியின்பாற்படுத்து அவளுயிரை அவ்வகையா லுய்யக்கொண்டாற்கே உரியளுமாக்கிக் கற்புநிலைக்கோரிழுக்குமின்றிக் கதையை முடிவுபெறச்செய்துதந்த இந்நூலாசிரியரவர்களின் தமிழ்க்கல்விநூலாராய்வின் நுட்பம் எவராலும் போற்றப்படத்தக்கதேயாம்.

ஆறாம் அத்தியாயத்தில், தமக்கு உற்றவிடத்துதவினாரை ஒருகாலும் மறக்கலாகாதென்பதும், நமது சகோதரிகள் இக்கால நாகரிகத்தைக் கண்டு மயங்கி வாளா இருத்தலின்றித் தத்தம் நிலைக்கும் வருணத்திற்கும் எற்ப ஒவ்வோர் கைத்தொழிலைப் பயின்று செய்துவருதல் குடும்ப சம்ரக்ஷணங்கள் முட்டின்றி நடத்தற்கும் தேசாபிவிருத்திக்கும் பிரதமசாதனமாமென்பதும், சாதுக்கள் வாயினின்றும் விளையாட்டிற்காயினும் எழும் வார்த்தைகள் தப்பாது இறுதியிற் பலித்தேவிடுமென்பதும், மங்கையர்கள் தம் விவாகத்தைக் குறித்து எழும் வினாக்களுக்கு ஆம் அன்று என நேர் விடையிறுத்தல் கிராமிய வழக்காமாகலின் தம்மனோநிச்சயம் தோன்ற வேறொன்றில் வைத்து வாக்கின் சாதுரியவகைகளாற் புலப்படச் சிறிது காட்டி நாணம் முதலிய நால்வகைக் குணங்களால் கட்டுண்டிருக்க வேண்டும் ஸ்திரீதருமங்களும், பிறவும் அடிப்பட்டுவந்த ஆன்றோர் நெறிமுறை தழுவி விரிக்கப்பட்டுள்ளன.

ஏழாம் அத்தியாயத்தில், கல்வியுடைமை ஒழுக்கமுடைமை சிற்றினச் சார்பின்மை முதலிய நற்குணங்களின் உண்மை நோக்கியன்றிச் செல்வ வளப்பெருக்கின் மிகுதி கண்டு மகட்கொடை நேர்தல் ஆகாதென்பதும், பெண்கள் கல்வியின் இன்றியமையாமையும், அதனை வலியுறுத்தற்கு உடன்பாட்டானும் எதிர்மறை முகத்தானும் எடுத்துக் காட்டும் பல்வகை மேற்கோள்களும், அவைகளுட் புதைந்து கிடக்கும் பொருளினாழ்வும், விவாகநிச்சயத்திற்கு வதுவரர்களின் உடன்பாடு வேண்டப்படும் என்பதும், பிறவும் செவ்வனே எழுதப்பட்டுள்ளன.

எட்டாம் அத்தியாயத்தில், தம்மோடு தொடர்புடையாரொருவர்க்குரிய பொருள்முதலியன தமக்கு வந்துறுமெனக் கருதித் தாமோர்முயற்சியுமின்றி வீண்காலங்கழித்தல் பெரும்பேதைமையே என்பதும், மறைவிற் செய்யப்படும் செயல்கள் ஒன்று மற்றொன்றாகி உத்தேசவகைகளாற் பிழைபட உணரவும்படும் என்பதும், ஆதலின் அவற்றின் உண்மைகள் உய்த்துணர்வு கொண்டு கடைபோக நன்கு ஆராயப்படவேண்டும் என்பதும் தம்கருமமே கண்ணாயினோர் சிற்றினச் சார்புடையராயின் குற்றம் இல்வழியும் உடையவராக்கிக் காட்டி வஞ்சிப்பர் என்பதும் பிறவும் எற்புற எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

ஒன்பதாம் அத்தியாயத்தில், நினைத்தலும் செய்தலோடு ஒக்குமாகலின் கொலைத்தொழிலைச் செய்தலேயன்றிச் செய்யஎண்ணினும் செய்வேனென வாயினாற் கூறினும் அக்கொலைப்பாவத்தினோர்பாகம் வந்தே உறுமென்பதும், பழவினையின் பயன் அநுபவிக்கப்பட்டே தொலையுமென்பதும், தருமத்தைப் பாவம் வெல்லாதென்பதும், ஒருபாற் கோடாது நடுநின்று உண்மைகாணும் நீதித்தலத்தினுள்ளோர் கைக்கொண்டொழுகவேண்டும் முறைமைகளும், நீதிகளின் தோற்றங்களும், அவற்றின் பரிணாமங்களும் பிறவும் நன்றாக ஓதப்பட்டிருக்கின்றன.

பத்தாம் அத்தியாயத்தில், தீயினச்சார்பும் களவொழுக்கமும் பயின்றுடையோர் இயல்பால் வரைந்து கொண்டு கற்புடைமகளிரோடு கூடி இல்லறம் நடத்த உடன்பாடுடையராகார் என்பதும், உரிமையாளர்கள் அறிந்துகொள்ளும்வகை தன் பொருள்களைப் பகுத்துச் சாதனஞ்செய்துவைத்தல் தன்னுயிர்க்கே ஏதமாய் முடியுமென்பதும் ஒருவருடைய ஒழுக்க வழக்கங்களைக் கண்டாராய்வுற அவர்சார்புடையார்பானின்று வினவ வேண்டும் என்பதும், அவைகளின் வகைகளும் பிறவும் பகுத்துக் காட்டப்பட்டுள்ளன.

பதினோராம் அத்தியாயத்தில், நியாயவாதிகளாவார் முறைமைகளும், தீக்குணமும் தீச்செயலுமுடையோர் சாதுலக்ஷணமே செய்து திரிவரென்பதும், அவர் ஒன்றுவேண்டின் பெரியாரைப்பேணும் பெருங்குணமுடையார்போல அவர் முன்னிலையில்நடித்துநின்று புறத்தே வஞ்சித்தொழுகுவரென்பதும் பிறவும் பாங்குபெறத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பன்னிரண்டாம் அத்தியாயத்தில், எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருளின் மெ

ய்ப்பொருள் காண்பதுவே நியாயாதிபதிகளின் கடமையென்பதும், செறிந்த நண்புடைமை உடையரேயாயினும் அதனை நோக்குதலொழிந்து நீதித்தலத்தில் உண்மையே உரைக்க வேண்டும் என்பதும், சொல்வன்மையின் திறத்தால் மெய்மை பொய்மையாகவும் பொய்மை மெய்மையாகவும் மாறித் தோன்றும் என்பதும், பிறவும் எளிதிற் கண்டுணர; உணர்த்தப்பட்டிருக்கின்றன.

பதின்மூன்றும் அத்தியாயத்தில், நாம் மகளிரும் நீர் மகட்கொண்மினெனத் தாமேசென்று மகட்கொடைநேரார் என்பதும், கன்னியரைத் தானஞ்செய்தலேயன்றிப் பொன்னாசையால் விற்றொழித்தல் ஆகாதென்பதும், தன்னுயிரோம்பினாரை நினைத்தலினும் எப்பொழுதும் மறவாதிருத்தலே பெருங்குலத்திற்குரிய விழுமிய குணமாம் என்பதும் பிறவும் தெளிவாகப் பகரப்பட்டுள்ளன.

பதினான்காம் அத்தியாயத்தில், நீதித்தலங்களிலே நியாயாதிபதியும் அவ்வவைக்களத்துளார் பிறரும் தம் அறிவாகிய கருவிகொண்டளந்து உண்மைநிலைகளை அவைகள் போய்மறைந்து கிடக்கும் இடங்கடோறும் துருவிக்காணுதற்கு வேண்டும் மதிநுட்பங்கள் இவை இவை என இக்கால வழக்கோடொட்டி நன்குகாட்டப் பட்டிருக்கின்றன.

பதினைந்தாம் அத்தியாயத்தில், வரைவின் மகளிர்கள் பொருள் முழுவதும் கவர்ந்துகொண்டபின் செய்வன இவை என்பதும், கற்புடைமகளிர்கள், தம் கற்புநிலைக் கிழுக்குறாவண்ணம் தம்மைத் தாமேகாத்துக் கணவர்மீது மாறா அன்பு பூண்டு வினைவயத்தால் தம் நாயகர்கள் எவ்விடத்தில் எந்நிலையில் எவ்வாறிருப்பரோ அவ்விடத்தில் அந்நிலையில் அவ்வாறு தாமும் நின்று அவ்வக்காலங்களில் நாயகர்க்கு அவாறியாமையால் வரும் துன்பங்களைத் தாமுமுடன் அநுபவித்துப் பொறுமைக்கோர் ஆகரமாகிப் பிறரறியாவண்ணம் துணைபுரிந்திருப்பரென்பதும் பிறவும் கேட்போர் மனமகிழச் சொல்லப் பட்டிருக்கின்றன.

பதினாறும் அத்தியாயத்தில், கதைத் தொடர்பிலே கேட்கப்படுபவர்களுட் சிலர் இவர் இவர் என வாசிப்பவர்களுக்குப் பேரதிசயந் தோன்ற முடிவிடங்காட்டி இன்சுவை ஊட்டலும் பிறவும் முடிக்கப்பட்டுள்ளன.

பதினேழாம் அத்தியாயத்தில், முயற்சியுடையார்க்குக் காலநீட்டம் இன்னும் வேண்டப்படுமென்பதும், வீணருக்குப் பொழுதும் நாளும் கழியாது நீட்டித்து நிற்பதுபோல் அவர்க்குத் தோன்றுமென்பதும், அறிவின் வலியிலாதோர் தம்மைத் தாமே மதித்துத் தம் புத்திபோனபடியே விஷயங்களை எண்ணி, எண்ணியபடியே வந்து கைகூடியதாகவும் துணிந்து வைத்து ஒருபயனையும் காண்டலின்றிக் களியாட்டயர்ந் திருப்பரென்பதும் பிறவும் வரன்முறையே வகுக்கப்பட்டுள்ளன.

பதினெட்டாம் அத்தியாயத்தில், வினைவயத்தால் சிலகாலம் யாவும் ஒன்றாகக்கூடி நின்று பொய்மை யெல்லாம் மெய்மையாகக் காணப்படும் என்பதும், அப்பொழுது சொல்லப்படுவன அங்கீகரிக்கப்படாமையின் அறிஞர்கள் ஒன்றும்பேசாது அடக்கமுடையராவரென்பதும், செய்யாதவர்கள் செய்தவர்களாகத் துணிந்து கொள்ளப் பட்டமையின் அவர்களது பொறுமைக் குணத்தை நோக்கியிருந்த தெய்வமே இறுதியில் காரியத்தை எவரும் அறியும்படி முன்னின்று காட்டிவிடுமென்பதும், தம்மினத்தாராயுள்ள உட்பகைஞர் செய்துவரும் மித்திரபேதங்களும் கொடுஞ் செயல்களும் இல்லகத்தில் எவற்றொழில் பூண்டுடையோரிற் சிலர் செய்நன்றி மறந்து பொருளாசையினால் அடாத காரியங்களைச் செய்து இல்லுடையார்குறும் தீமைகட்கெல்லாம் மூலகாரணரா யிருப்பரென்பதும், கண்களால் நேரே காணப்பட்ட விஷயங்களும் பொய்யாகி வேறுறினுமுறும் ஆதலின் கண்ட மாத்திரையானே ஆராய்வின்றி உடனே அவைகட்கு எற்பன செய்துவிடுதல் தாமே பெருந்துன்பு உழத்தற்கு ஏதுவாகுமென்பதும் பிறவும் தொகைவகை விரியாற் கோவை செய்யப்பட்டுள்ளன.

பத்தொன்பதாம் அத்தியாயம், துன்பமுற்றவர்க்கலால் இன்பமில்லையென்பதும், ஞானசாத்திரார்த்தங்கள் குருமுகத்தாலே பெற்றுக் கொள்ளற்பாலனவென்பதும், சரியை கிரியை யோகம் ஞானமென்னும் நால்வகை மார்க்கங்களின் வரலாறுகளும், அவற்றானடையநின்ற முத்திபேதங்களினியல்புகளும், புண்ணியபேதங்களின்றிறங்களும், ஞானபூசைகளின் உயர்வும், பதி பசு பாச லக்ஷணங்களும் சைவசித்தாந்தசமய விளக்கமும், மறுபிறப்பினுண்மையும், மானசவியாபாரங்களும், அவைகளடங்குதற்கு வேண்டப்படுவனவும், ஸ்ரீ. பஞ்சாட்சரத்தின் மகிமைகளும், சிவஞானியர்களியல்பும், அவர்க்குச் செய்யும் திருத்தொண்டின் பலனும், பரமுத்தியடைதற்கு ஏதுவாவன இவையென்பதும், பிறவும், தேவாரம், சிவஞானசித்தியார் முதலிய ஞானநூல்களினின்றும் எடுத்துக்காட்டப்பட்ட மேற்கோள்களோடும் உதாரணங்களோடும் ஐயமின்றித் தெரிவுறுத்தப்பட்டு வீடுபேற்றிற்கு நிமித்தமாய் இந்

னூலுக்கு ஓர் நாயகமணிபோன்று ஞானப்பிரகாசமயமாய் அகவிருளை அகற்றித் திருவருட்பேற்றிற்குச் சாதனமாய் விளங்குகின்றது.

இருபதாம் அத்தியாயத்தில். வேசியர் வலையிற் சிக்குண்டுழலும் தீயொழுக்கினனே யாயினும். கற்புடையாள் நிலைமையின் உறுதிகாணில் அச்சமுடையனேயாகிக் காமத்தீயால் அவள் கற்பினைக் கலக்குற முயலானென்பதும். ஒருபொருளை ஓர் ஏதுப்பற்றி மறைத்துவிட நேரின் மறைக்கப்பட வேண்டியகாரணம் கடைபோய் முடிவுறுங்காறும் அந்நிலையிற் பிறழாது அடக்கமுடைமையோடு சாதிக்கப்படவேண்டு மென்பதும். மகட் கொண்டமருகர் நெறியலா நெறியிற் சென்று ஒழுக்கநெறி தவறுவராயில் அதுகாரணமாகத் தம்பதிகளைப் பிரிவுசெய்துவிடாது வேண்டுவ நல்கி நல்வழிப்படுத்திக் குடும்பபாரத்தைக் கொண்டுய்க்குமாறு இவ்வாறெனக் காட்டித் துணைசெய்து நிற்றலே மாதுலர் மாமியர் கடன்முறையென்பதும், தாய்தந்தையர் செல்வமுடையரேயாயினும் நாயகன் வறுமையுடையனேயாயினும் அவனுடன் கூடிவாழ்ந்து பிறந்தகுலம் புகுந்தகுலம் ஆகிய இரண்டனையும் விளக்குவதே கற்புடைமடவாரழகினை அழகுசெய்து நிற்குமென்பதும். பிறவும், இனிமைபயப்ப இயம்பப்பட்டுள்ளன.

இருபத்தோராம் அத்தியாயத்தில். கல்வி கல்லாமையும் நூற்கேள்வியின்மையும் முதுமைப்பருவத்திலே நினைந்து நினைந்து வருந்தமுறுதற் கேதுவாமென்பதும், தேசசஞ்சார காலங்களிலே. மார்க்கங்களிலும் வண்டிகளிலும் நிகழும் களவுகளும்; திருடர்கள் செய்யும் தந்திரோபாயங்களும் அவைகளினின்று நீங்கும் வழிகளும் நண்புடைமையின் அருமையும், சிந்தித்தலின்றி ஓர் உயிர் வருந்தும்படி செய்யின் காத்திராப்பிரகாரம் செய்தாற்கே பெருங்கேடு வருமென்பதும் மெய்யன்பு செய்யின் செய்யப்பட்டார் தெய்வச் செயலாய் சமயத்தில் வந்துதவுவரென்பதும், கதைத் தொடர்பின் விளக்கங்களும் பிறவும், கூறப்பட்டிருக்கின்றன.

இருபத்திரண்டாம் அத்தியாயத்தில். ஒருசிலர் நல்லொழுக்கமுடையவர்களை இழிவு காட்டி அழுக்காறு கொண்டு செய்யும் தீச் செயல்களை ஒழித்துக் கடவுளே அவர் நல்லொழுக்கத்திற் கேற்ற உயர்வினைத் தந்து அவர்க்குச் சான்றாகி நின்று உண்மையை வெளிப்படச் செய்வரென்பதும். சரித்திர சம்பந்தத்திற் கேட்கப் பட்டவர்களின் தொடர்பு விளக்கங்களும் பிறவும் நிரனிறை வகையால் தனித்தனி வகுத்துக் கூறப்பட்டுள்ளன.

இருபத்துமூன்றும் அத்தியாயத்தில், மதுபானஞ் செய்வோர் தம்முடன் சேர்ந்தவர்களையும் மதுபானிகளாகச்செய்து விடுவரென்பதும், சூதினால் வரும்கேடுகளும், ஒருத்தியைப் பணிப்பெண்ணாகக்கொண்டு. அவட்கு வேசித்தொழில் பயிற்றிப் பொருள் வருவாய் செய்குநரு முளராவர் என்பதும், கைத்தொழிற் பயிற்சிப்புடையோர் வறுமையாற் சிறுமையுறா ரென்பதும், சீவகாருணியம் ஆயுள்வேத பண்டிதர்கட்கு ஓரிலக்கணமாமென்பதும், விதவா விரதம் பூண்டிருக்கும் சிறுபெண்களுக்கு உடன்பிறந்தார் முதலிய கிளைஞர்கள் செய்யும் இரக்கமற்ற கொடுஞ்செயல்களும். கீழுத்தியோகத்தர்கள் தமது நயம் கருதாது உடையானது ஊதியத்தையே விருத்தி செய்யவேண்டும் என்பதும். அது, உடையவனால் அறியப்பட்டுப் பின் பெருநன்மைகளைத் தருமென்பதும். கதைத் தொடர்பின் விளக்கங்களும் பிறவும் திரிபின்றிக் காட்டப்பட்டிருக்கின்றன.

இருபத்துநான்காம் அத்தியாயத்தில். தமக்குத் தீமையே செய்துவரினும் அவர்க்கு நன்மையே செய்துவருதல் அறிஞர்கடனென்பதும். உபயார்த்தம் தந்து இரட்டுறமொழிய நிற்கும் சிற்சில வாக்கியங்களும், செல்வத்திற்கழகு செழுங்கிளை தாங்குதலே என்பதும். கதைத் தொடர்பின் விளக்கங்களும் பிறவும் எவர்க்கும் எவையும் திரிபின்றி விளங்க வரன்முறையே எழுதி வியப்பும் உவப்பும் தோன்ற முடிக்கப்பட்டிருக்கின்றன.

அர்த்த புஷ்டியோடு சொற்பஞ்சமின்றி இவ்வாறு தொகைவகை விரியால் உலகியலும் நீதிகளும் பிற ஒழுக்க வழக்கங்களும் கதைவாயிலாகக் கலந்தூட்டி இடையிடையே கதாசம்பந்தமான அழகிய சித்திரப்படங்களால் விளக்கி நடக்கும் அத்தியாயங்களுள்ளே விரிவஞ்சி எம் சிற்றறிவுக் கெட்டியவளவால் ஒரு சிறிது எடுத்து எழுதப்பட்டது என்றுணர்க.

இன்னும். இந்நூல் படிக்கத் தொடங்குவோர்க்கு மேன்மேலும் அவாவை யுண்டுபண்ணி அவர் மனங்களைக் கவர்ந்து பரவசப்படுத்தி அறிவினை மாசகலக் கழுவி விரித்துச் செல்லும் தண்ணென்ற ஒழுக்க மார்க்க இயல்பினையுடையது. எக்காலத்தார்க்கும் எச்சமயத்தார்க்கும் ஒப்ப. திருவள்ளுவர் திருக்குறள்போல ஒழுக்க வழக்கங்களை எடுத்துக் காட்டும் பெருவனப்பு வாய்ந்துள்ளது. ஆகலின் ஆடவர் மகளிர் என்னும் இருபாலார்க்கும் இன்றியமையாதது.

இத்துணைச் சிறந்த கதாரத்தினத்தை இயற்றி உதவியவர்கள் இரங்கோனில் பேபர்கறென்சி ஆபீஸ் பொக்கிஷதாரரான ஸ்ரீமான். ராய்சாஹிப் திரிசிரபுரம். ம. பொன்னுச்சாமிப்பிள்ளை அவர்களே. கமலாக்ஷி என்னும் நூலுக்கும் இவர்களே ஆசிரியர். இவர்களது ஆங்கிலம் தமிழ் என்னும் இருபாஷா சாமர்த்தியமும் அறிவின்வலியும் சமய நூலுணர்ச்சியும் இவைகளை இந்நூன்முகங்கொண்டு தமிழுலகிற்குதவிய பரோபகாரசிந்தையும் தமிழுலகினரால் மறக்கப்படாது நன்றி பாராட்டிப் போற்றற்படற்குரியனவேயாம்.

இந்நூல். தமிழ்ப்போஷணை குறைவுபடுங்காலம் நோக்கித் தளர்வுறுவண்ணம் காப்பத்தோன்றித் தமிழ் மொழியின் கண்ணும் அதனைக் கற்றோர்கண்ணும் மிக்க அன்பு பூண்டொழுகும் மகா வள்ளலாகிய ராய்பஹதூர். ஸ்ரீமான். பீ. எம். மதுரைப்பிள்ளை அவர்கட்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டிருக்கின்றது

இத்தகைய சிறந்த நூலை எமக்கு அனுப்பிவைத்த ஆக்கியோனவர்களுக்குப் பேரன்புடன் துதி கூறுகின்றேம்.

☞ இந்நூலை ஒவ்வொருவரும் வாங்கி வாசித்தல் வேண்டுமென்று மேற்காட்டிய நியாயங்களினால் கூறுமதே அமையும்.

பத்திராதிபர்.

## பத்திரிகைகளின் வரவு.

### செந்தமிழ்ச்செல்வி.

இது இந்தியாவைச் சேர்ந்த வேளாங்கண்ணி என்னும் இடத்தினின்றும் வெளிவரும் ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதில் சமய விஷயங்களும், கல்வி விஷயங்களும், பொதுநன்மைக்குரியனவும். கற்பனைசரித்திரங்களும், தலமகிமைகளும். சுதேசவர்த்தமானங்களும். பிறதேசவர்த்தமானங்களும், இவைபோன்ற பற்பல அரிய விஷயங்களும், பிறவும் இடப்பட்ட பெயருக்கு ஏற்ப இனிய செந்தமிழ்நடையில் எழுதப்பட்டு வருகின்றன. இதன் பத்திராதிபர் வித்துவான் ஸ்ரீ. கே. அருணாசலத்தேவர் அவர்கள். இதன் வருடசந்தா உள்ளூருக்கு ரூபா ௧. அன்னியதேசங்களுக்கு ரூபா ௨.

### நாகைநீலலோசனி.

இது திருநாகைக்காரோண மெனப்படும் நாகபட்டணத்தினின்றும் சுக்கிரவாரங்கள்தோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை. இதில் அரிய பண்டிதரத்தினங்கள் காலந்தோறும் செய்யும் உபந்நியாசங்களும், இதோபதேசங்களும், கடவுளினியல்புகளும், பத்தியைவிளக்கும் சரித்திரங்களும், சுதேசவர்த்தமானங்களும், பிறதேசவர்த்தமானங்களும், இனிய மதுரமாகிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு வருகின்றன. இந்தியாவில் நெடுங்காலம் நின்றுலவும் பத்திரிகைகளுள் இதுவும் ஒன்று. இதன் பத்திராதிபர் ஸ்ரீ. ஜீ. சதாசிவம்பிள்ளை அவர்கள். இவர்கள் நீடித்த அனுபவம் உடையவர்கள். இதன் வருடசந்தா உள்ளூருக்கு ரூபா ௩. வெளியூர்களுக்கு ரூபா ௫.

இப்பத்திரிகைகளை எமக்கு அனுப்பிய பத்திராதிபர்களுக்கு நன்றியறிதலான வந்தனங்கூறி நமது பத்திரிகையையும் அனுப்பிவருகின்றேம். ப—ர்.

## புதுப்பஞ்சாங்க வரவு.

இது யாழ்ப்பாணம் பரித்தித்துறையைச் சேர்ந்த தும்பைநகர் வாசரும், கந்தபுராண உரையாசிரியருமாகிய பிரமஸ்ரீ. ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களால், கணிக்கப்பட்டு, நமது கலாநிதி அச்சியந்திரசாலையிலே பதிப்பிக்கப்பட்டு வெளியாயிற்று. இதில் சனன மரணசௌச விதிகளும் எழுதப்பட்டிருக்கின்றன. இதிலோர் பிரதியை எமக்கு அனுப்பிவைத்த ஆக்கியோனவர்களுக்கு மனமார்ந்த துதிகூறுகின்றேம். ப—ர்.

## விளம்பரம்.

இரங்கூன் பேபர் கறென்ஸி
ஆபீஸ் பொக்கிஷதாரர்
ஆகிய ஸ்ரீமான். திரிசிரபுரம்
ம பொன்னுச்சாமிப்பிள்ளை;
ராய்சாயிப் அவர்கள் இயற்றிய

**கமலாக்ஷி**

(படங்களுடன் இரண்டாம் பதிப்பு)

**விஜயசுந்தரம்.**

(படங்களுடன் முதற் பதிப்பு)

அருமை வாய்ந்த இந்தச் செந்தமிழ்க் கற்பனைக்கதைகள் பெரும்பாலும் அங்கிலேய நாவல்க

ளின் போக்கை யனுசரித்து எளிய நடையில் நாடகச்சாயலாய் சம்பாஷணைரூபமாக எழுதப் பெற்றுள்ளன. ககூ௦௩-ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளியான கமலாக்ஷிப் பிரதிகளெல்லாம் விலையாகி விட்டன. அதன் அருமை பெருமைகளை யுணர்ந்து அனேக நண்பர்கள் வேறொரு கற்பனைக் கதையை எழுதும்படி எனதருமைத் தந்தையைக் கேட்டுக்கொண்டமையால் அவர்களுடைய விருப்பத்தைப் பூர்த்திசெய்து இப்பொழுது கமலாக்ஷி இரண்டாம் பதிப்போடு விஜயசுந்தரம் என்னும் வேறொரு கற்பனைக்கதையையும் அச்சிட்டு பெருந்தொகைச் செலவுசெய்து ஸந்தர்ப்பத்திற் கேற்ற விதம் ஒவ்வொரு புத்தகத்திற்கும் அழகிய படங்கள் ஏறக்குறைய உ0 சேர்த்து வெளியிட்டிருக்கிறார். அப்புத்தகங்கள் நேர்மையான பைண்டுடன் வெளியாய் விட்டன.

தமிழ்நாட்டின் வழக்க ஒழுக்கங்களையும், நன்னெறியையும், செந்தமிழ் நடையையும் உலக தந்திரங்களையும் அறிய விரும்புவோர்க் கெல்லாம் இக்கதைகள் மிகுந்த பயனைத் தருவதோடு மனக்களிப்பையுந் தரும் என்பதற்கையமில்லை.

புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் நாற்பது பாகங்களுக்கதிகமுள்ளன.

### புத்தக விலை.

#### கமலாக்ஷி.

பைண்டு (முழு கலிக்கோ) பிரதி க-க்கு உ-அ-0
ராப்பர் தனிப்பிரதி க-க்கு உ-0-0 (தபாற்செலவு வேறு)

#### விஜயசுந்தரம்.

பைண்டு (முழு கலிக்கோ) பிரதி க-க்கு உ-அ-0
ராப்பர் தனிப்பிரதி க-க்கு உ-0-0 (தபாற்செலவு வேறு)

இப்படிக்கு
தி. போ. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை
கூக-ம் நம்பர் வீடு, சஅ-வது தெரு
ஈஸ்டு இரங்கூன்.

---

அசாதி ரோகங்களுக்கு பிரதிக்ஷ

# அவுஷதம்.

## கஸ்தூரிதிராவகம்.

இந்தத் திராவகத்தில் ஒருநேரத்துக்கு மூன்றுசொட்டுவீதம் ஒருஒயின் கிளாஸ் தண்ணீரில்விட்டு காலை, மாலை, இரவு படுக்கும்நேரம் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட நீர் அழிவினுல் தாங்க முடியாத வருத்தத்தை மூன்றுநாளையில் சுகமாக்கும் ச0-நாள் மருந்து சாப்பிட்டால் வியாதி நன்றாய்ச் சொஸ்தமாகும். தருணவயசுள்ளவர்களுக்கு உண்டான பக்க வாய்வு துர்நடத்தையால் ஆண்மை பலமற்று சையோகம்செய்ய இயலாதவர்களுக்கு உள்ளுக்குச் சாப்பிட மேற்படி திராவகமும் ஆணுடம்பில் பூச துஜஜிபங்கதைலமும் எடுத்து உபயோகிக்க வேண்டியது. இன்னும் மேற்படி திராவகமானது இருமல், மூலச்சூடு, காசரோகம், அதிகநாட்சென்ற வாதரோகம், தலைச்சுற்று மூளை பலவீனம்; ஞாபகசக்திக்குறைவு, கண்புகைச்சல், பார்வைக்குறைவு; நாட்சென்றபிரமேகம் இவைகளுக்குக் கைகண்ட ஒளஷதம். இந்தமருந்திலே கஸ்தூரி, தங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், சாம்பிராணிப் பதங்கம் வேறு மூலிவகைகளும், சேர்த்து திராவகம்வடித்துவைத்திருக்கிறேன். இந்த மருந்துகளெல்லாம் சேர்க்கப்பட்டிருப்பதனுல்தான் இது சீக்கிரம் சுகமடைவிக்குமென்று கூறுகிறேன். இந்த மருந்தைக்கொடுத்து அனேக பிரயாணிகளைச் சுகப்படுத்தி விலையுயர்ந்த வெகுமதிகளும் பெற்றிருக்கிறேன் இப்போது எல்லாருடைய பிரயோசனத்துக்காக சொர்பசெலவெடுக்க வெளியே பிரசித்தம்பண்ணிவருகிறேன். பித்தபாண்டு, மகோதரம்; காய்ச்சல் கட்டி, வயிற்றிலிருக்கும் துர்நீர்களுக்கு கைகண்ட ஒளஷதம் விலை அரை அவுன்சுக்கு ரூ. க0. இதற்குக் குறைந்து அனுப்பப்படமாட்டாது. தபாற்செலவு பிரத்தியேகம்.

## துஜ்ஜிபங்கதைலம்.

சிலர் தம் இளம்பிராயத்தில் புத்தியீனமாய் இந்திரியத்தை தம்கையால் பழுதாக்கிக்கொள்வதால் சிலநாளைக்குப்பின் நரம்புகள் பழுதுபட்டு ஆணுடம்பு பெலனற்றுச் சுருண்டு சிறிதாய்ப்போய். இந்திரியம் குறைந்தும், துர் ஸ்திரி சையோகத்தால் அநேக உஷ்ணமான மருந்துகள் சாப்பிட்டு பெலனற்றுப்போகின்றார்கள். இவ்விருவகையுள்ளவர்கள் மனக்கவலையுடன் வியாதியை ஒருவருக்கும் சொல்லாமல் வெட்கப்பட்டு இருப்பார்கள். அவர்கள் இத்தைலத்தை ஆண் உடம்பிற்பூசி உள்ளுக்கு கஸ்தூரிதிராவகமும் சாப்பிட்டால். ஆண் உடம்பு சரியான நிலைமைக்குவந்து பலப்பட்டு இந்திரியம் விர்த்தியாகி சச-தினத்துக்குள் வியாதி சுகப்படும். உக-நாள்த்தைலம் பூசி மேற்படி திராவகம் சாப்பிடுவரேல் வியாதியின் சுகந்தெரியும். ஒரு அவுன்ஸ் தைலத்தின் விலை ரூ உ. அணு அ. தபாற்செலவு பிரத்தியேகம்.

## வீரியஸ்தம்பனக்குளிகை.

ஆச்சரியம்! மிக்கஆச்சரியம்!! ரோகமற்றவர்களுக்கு ஒரேகுளிகையில் தெரியும். இந்தக்குளிகை (இந்திராசனம்) ஒருநாளில் ஆயிரம் ஸ்திரீகளைச் சம்போகிக்கிறதற்காக உண்டாக்கப்பட்டது. இதைச்சிலர் சாஸ்திரத்திற் சொல்லியபிரகாரம் செய்யாமல் சொர்பகிரயத்திர்கு விர்பனைசெய்துவருகிறார்கள். அதைச் சனங்கள் பெற்று அதிலே சொல்லிய காரியங்கள் முழுதும் வித்தியாசப்பட்டு எமாந்துபோகிறார்கள். ஆனுற் சாஸ்திரப்படி அதிக பொருள்செலவழித்துச்செய்கிறவர்களிடம் பெறப் பின்னடைகிறார்கள். இது உலகவியல்பே. இதில் முக்கியமாயறியவேண்டியகாரியம் யாதெனில். இதின்முழுக்கிரயமும் கொடுத்து எடுத்து ஒருகுளிகையாற் சுகமறியலாம். காரியமும் விளங்கும். இதைப்பற்றி அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. க௨-குளிகைகளுக்குக் குறைய அனுப்பப்படமாட்டா. பரீட்சித்தவர்களே இதன்சுகத்தை அனுபவிப்பார்கள். க௨-குளிகைகளின் விலை ரூபா உ. தபாற்செலவு அணு ச.

55

உ

திருச்சிற்றம்பலம்.

திருக்கயிலாயபரம்பரைத்

திருவாவடுதுறையாதீனத்து

மஹாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ

# அம்பலவாணதேசிகசுவாமிகள்

அனுப்பியருளிய

திருமுகம் நோக்கி

எமது அருமைத் தமிழாசிரியர்

சுன்னாகம்

## ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவரவர்கள் செய்யும் விண்ணப்பம்.

சிவவணக்கம்

முதற்பா.

க. திங்களணி செஞ்சடிலன் சேவடிகள் சிந்திப்பாம்
இங்குவரு மிட்டசித்தி யென்று.

குருவணக்கம்

விருத்தம்.

உ. பத்திதருங் * கோமுத்தி முதலாய தலங்களுறை
பரமர் கோயில்
நித்தியநை மித்திகங்கள் வழுவாது நடாத்திவரு
நியம சீலன்
தத்துவசாத் திரங்களெனும் பதிநூல்க ளினிதுணருஞ்
சாது சங்கன்
சித்திபொலி யருட்குரவர் சிகாமணியம் பலவாணன்
றிருத்தாள் போற்றி.

* கோமுத்தி—திருவாவடுதுறை

## கட்டளைக்கலித்துறைகள்.

ங. தேவார மாதி யருட்பெருஞ் செல்வர் திருமுறைகள்
நாவார வோதிக் குசையினுங் கூரிய நன்மதியாற்
பாவாணர் கொண்டிட நற்பொரு ளாய்ந்து பகர்ந்துமகிழ்
கோவே நமோநம வம்பல வாண குருமணியே.

## க்ஷேமப்பிரச்சிஞேத்தரம்.

ச. தேவாதி தேவ னிடைமரு தீசன் றிருவருளும்
நாவா லடிக ளுரைசெய்யு * மாசியு நண்ணுமென்றால்
ஓவாம லீங்குக் குறைபொன்று சேர்வது முண்டுகொல்லோ
கோவே யருள்பொழி யம்பல வாண குருமணியே.

* ஆசி—வாழ்த்து.

## முதலாந்திருமுகம்.

ரு. அன்றே விடுத்த திருமுக நோக்கி யகமகிழ்ந்தேன்
ஒன்றோ விபூதிப் பிரசாத முங்கிடைத் துப்பெற்றேன்
மன்று ரடிகள் வழுவாத் தியான மருவுகுணக்
குன்றே துறைசையி லம்பல வாண குருமணியே.

## இரண்டாந்திருமுகம்.

சு. கற்றோர் தொழுமத்தி யார்ச்சுன மேவுங் கடவுளுக்குப்
பற்றாரும் வாசந்தி கோற்சவ ஞாபக பத்திரமும்
பெற்றேன் மகாலிங்க தேவன் றிருவருட் பேறதன்றோ
வற்றா வருள்செறி யம்பல வாண வரமணியே.

[மத்தியார்ச்சுனம்—திருவிடைமருதூர். வாசந்திகோற்சவம்—வசந்தோற்சவம். ஞாபகம்—அறிவிப்பு. மகாலிங்கதேவன்—திருவிடைமருதூரில் வீற்றிருக்கும் கடவுள்.]

## கடிதபராமுககாரணம்.

எ. அன்றே * யடிக டிருமுகம் வந்தபி † னார்வமொழி
இன்றே யெழுதுது மின்றே யெழுதுது மென்றபன்னாள்
சென்றே ‡ யொழிந்த செயல்பல நேர்ந்த திறமதனால்
குன்றே யெனுங்குண வம்பல வாண குருமணியே.

* அடிகள்—மஹான். † ஆர்வமொழி—பிரியவாக்கியம். ‡ ஒழிந்த—வினைமுற்று.

## வழிமொழி.

அ. ஆவடு தண்டுறை யாதீன மேவு மதிப்தியாய்த்
தேவர் தலங்களைச் சைவ நெறிகளைச் செந்தமிழைக்
காவல் புரிந்திடு மம்பல வாண கலாநிதிக்குப்
பூவுறு நாரென வென்புன் கவியும் பொருந்துகவே.

57
MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
TIRUVANMIYUR :: MADRAS-41.

பாடினேன் பெயர்.

௯. விருதமர் * கோகழி யம்பல வாண வியன்குருவின்
அரிதுணர் கல்வியை ஞானத்தை யீகையை யாடகப்பொன்
பொருதிரு மேனியைச் சைவநல் வேடப் பொலிவழகைக்
கருதுறுஞ் சுன்னைக் குமார சுவாமி கவியிவையே.

* கோகழி—திருவாவடுதுறை.

☞ ஆசிரியரவர்கள் இன்னுஞ் சில செய்யுள்களோடு சேர்த்துப் புத்தகரூபமாக அச்சிட்டு மஹாசந்நிதானத்திற்குச் சமர்ப்பிக்கும்படி வைத்திருந்த இச்செய்யுள்களை எமது வேண்டுகோளை அங்கீகரித்து எம் பத்திரிகையிலும் பிரகடனஞ் செய்யும்படி தந்த நன்றியின்பொருட்டுத் துதிகூறுகின்றோம். இப்பொழுதைப் பிரகடனத்தால் அதற்கு வருவதோர் இழுக்கில்லை.

பத்திராதிபர்.